𑌶𑍍𑌰𑍀𑌃

॥ 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃 ॥

வேதாந்த தீபிகை

ஸம்பாதகர் :—நடாதூர் ஸ்ரீநிவாஸாசாரியர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 22] ஸ்ரீமுகஸ்ல ஐப்பிசிமீ [ஸஞ்சிகை 1

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

‘தீபிகை’யின் வரலாறு

சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த சபையாரால் இருபது வருஷங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டு ஸமீப காலம் வரையில் இடைவிடாமல் நமது ஸம்பிரதாய ப்ரவர்த்தனத்திலீடுபட்டு வந்திருக்கும் “வேதாந்த தீபிகை” சென்ற ஒன்றரை வருஷ காலமாக ப்ரஸுப்தமாக விருந்து இப்பொழுது சிரமந்தெளிந்து விழித்தெழுந்து முன்போல் தன் கைங்கரியத்தை ஆரம்பிப்பதைக்கண்டு தீபிகாபிமானிகள் மிகவும் சந்தோஷமடைவார்களென்பது எமது துணிபு.

‘தீபிகை’ நின்றுவிட நேர்ந்த சிறிதுகாலம் முன் முதற்கொண்டே இவ்வித ஸந்தர்ப்பம் ஏற்படக்கூடு மென்பதையறிந்து தீபிகை சந்தாதார்களுக்கு பல ப்ரகாரங்களாக விஞ்ஞாபனங்கள் செய்து கொள்ளப்பட்டு வந்தது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம். சந்தா

தொகை மிக அதிகமாக பாக்கி விழுந்து வந்தது. சந்தாதார்கள் கிருபைசெய்து இதையனுப்பாமல் போனால் மிகுந்த ச்ரமம் ஏற்படுமென்பதும் தெளிவாகத்தெரிவித்துக் கொள்ளப்பட்டது. ஆயினும் ஒரு பகுதியினர் க்லுப்தமாகச் சந்தாவை யனுப்பிவந்தனரே யன்றி மற்றவர்கள் பொதுவாக கிருபை செய்யவில்லை. கடைசிகாலத்தில் அர்த்த ஸௌகர்ய மில்லாததால் மிகுந்த ச்ரமத்துடன் இரண்டு ஸஞ்சிகைகள், மூன்று ஸஞ்சிகைகள் சேர்த்து தீபிகை பிரசுரம் வெளிவந்தது. தீபிகை ஸரிவர ப்ரசுரிக்கப் பட்டபின் வருஷ சந்தாவைப் பறவெண்டுமென்றிருக்க அதற்கு ஸௌகரியமே ஏற்படாது கடைசியான வருஷ சந்தா அடியுடன் வசூலிக்கப் படாமலே போயிற்று. ஒரு சில சந்தாதார்கள் மாத்திரம் ஆஸ்தா விசேஷத்தால் இந்த வருஷத்திலும் சந்தாவை அனுப்பிக்கொடுத்தனர். ஆனால் இதன் மொத்தத் தொகை ஸொல்பமாகவே யிருந்தது. ஆக வேறு ஸந்தர்ப்பம் ஏற்பட்டு 'தீபிகை'யைக் கிரமமாக வெளியிடக்கூடும் என்ற காலம் வருமென எதிர்பார்த்த தெல்லாம் கைகூடாமல் முடிவில் அச்சாபீஸ்களில் ரூ. 300 வரையில் கடன் பாக்கி நின்றமையால் முன்னறிவிப்புக்குக்கூட இடமில்லாமல் தீபிகையை மிகுந்த வருத்தத்துடன் நிருத்த வேண்டியதாயிற்று. பத்திரிகையில் அதற்கு முந்திய வருஷத்தில் பெரும் தொகை நஷ்டமேற்பட்டு நடைவருஷ சந்தாவும் வசூலாகாததே இவ்வித துர்பாக்யத்திற்கு முக்கிய காரணமாகும். இதுதவிர வேறெவ்விதமான காரணமுமில்லை. இதுவிஷயம் இந்த ஸஞ்சிகையில் வெளியாகியுள்ள கணக்கு விவரத்தினின்று ஸஹ்ருதயர்களுக்குத் தெளிவாகுமென எதிர்பார்க்கிறோம்.

இது பழைய விருத்தாந்தமாகும். இவ்விதம் நேர்த்த பின் 'தீபிகை'யை எப்படியாவது மறுபடியும் உயிர்ப்பித்து அது ஸ்திரமாக நடக்கும்வகை தேட பல ப்ரகாரமாக ப்ரயத்தனஞ் செய்யப்பட்டது. இந்த ப்ரயத்தனம் திருப்திகரமாக பலனளித்ததென்று சொல்லுவதற்கில்லை. இருப்பினும் அடியுடன் நிஷ்பலமாயிற்றென்றும் சொல்லுவதற்கில்லை. சென்னை உத்தியோகஸ்தர்கள் சங்கத்தினர் திருக்குடந்தையில் சிலமாதங்கள் முன் இரண்டு நாடகங்களை தீபிகைக்கு உபகரிக்கவென்று நடத்தியதில் ஸுமார் 200 கிடைத்ததன் பயனாக "ஸ்ரீ சரண்யன் ஸங்கல்பத்தை முன்னிட்டு எப்படியாவது தீபிகையை மீண்டும் ஆரம்பித்து நடத்துவதென முடிவுசெய்ய இடமேற்பட்டது. அச்சாபீஸ்களுக்குப் பாக்கிப் பணப் கொடுக்கவேண்டியதற்கு இந்த த்ரவ்யத்தைச் செலவழிக்காமல் தீபிகையை யாரம்பித்து, பின்னால் ஏற்படும் ஸௌகர்யங்களைக் கொண்டு பழைய நிர்ப்பந்தங்களை நிவர்த்

தித்துக் கொள்ளலாமென்பது நிர்வாகக் கமிட்டியின் அபிப்பிராய மாகும்.

இப்படி வேதாந்த தீபிகையை உயிர்ப்பிக்க ப்ரயத்தனஞ் செய்யப்பட்டு வரும் காலத்தில், இடையே மூன்று மாதங்களுக்கு முன் 'வைதிக மத தீபிகை' என்ற ஒரு மாதப் பத்ரிகை சைதாப்பேட் டையில் சிலரால் ஆரம்பிக்கப்பட்டு அதற்கு ஸ்ரீ உ. வே. வாஸுதேவா சார்ய ஸ்வாமியே பத்ராதிபராக விருக்கவும் நேர்ந்தது. இந்த வைதிக மத தீபிகை ஸஞ்சிகை வெளியிடப்படு முன்னர் முதற்கொண்டு நமது வேதாந்த தீபிகையை உயிர்ப்பிக்கும் விஷயம் அதனதிகாரி களுக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, நீண்டகாலம் ஸம்ப்ரதாய ப்ரவ சன கைங்கர்யத்தில் ஈடுபட்டு வந்துள்ள வேதாந்த தீபிகையே வெளி வருவதற்கு அவர்கள் உதவ வேண்டுமென்பதாகப் பிரார்த்தித்துக் கொள்ளப்பட்டது. ஆனாலும் அப்பத்திரிகை வெளியிடப்பட்டது அதன் பின்னரும் அப்பத்திரிகையை வேதாந்த தீபிகையுடன் ஸம்பந் தப்படுத்தி, வேதாந்த தீபிகையை வெளியிடுவதற்கான ஒரு ஏற்பாடு ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில் (3-9-33) செய்யப்பட்டது. இதற்கு உ. வெ. வாஸுதேவாசார்ய ஸ்வாமியும், வைதிக மத தீபிகை ப்ரவர்த்தகர்களில் முக்கியரான ஸ்ரீமான் எ. கிருஷ்ணராவும் வந்திருந்து இந்த ஏற்பாட்டை ஆமோ தனஞ் செய்திருந்தனர். அவ்வித மிருந்தும், அவர்கள் தனியே வைதிக மத தீபிகையை நடத்துவதற்கான ஏற்பாடுகளை அக் காலத்தி லும் செய்து வந்ததாகச் சில ஹேதுக்களைக் கொண்டு தெரியவந்த தாலும், பின்னர் 10 அல்லது 12 நாட்கள் அவகாசத்திற்குள் மூன்று வது ஸஞ்சிகையையும் அவர்கள் வெளியிட்டதாலும் அவர்கள் வேதாந்த தீபிகையுடன் ஸம்பந்தப்படுவதைக் கார்யகரமாகச் செய்ய இஷ்டப்பட வில்லையென ஏற்பட்டது. இது பற்றி அடியேங்கள் சோகிக்கிறோமாயினும், வேதாந்த தீபிகையின் ஸ்திதியையும் பெரு மையையும், ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் ஸ்திதி பெருமை களையும் உத்தேசித்து இதை எப்படியாகிலும் யதாபூர்வம் ஸ்தா பிக்க வேண்டுமென்ற ஆஸ்தை நிர்வாகிகளுக்குப் பெரிதும் ஏற்பட் டது. இவ் வெண்ணமே தீபிகாபிமானிகள் பலருக்கும் உதிக்கு மென்பது எமது துணிபு.

இதை யனுசரித்தே இப்பொழுது 'தீபிகை' மீண்டும் வெளியிடப் படுகிறது. இதற்கும் வைதிக மத தீபிகைக்கும் ஒரு ஸம்பந்தமும் கிடையாது.

ஹிந்து மதஸ்தாபன போர்டு கமிஷனர் ஸ்ரீ உ. வெ. நடாதூர் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி நிர்வாஹஸபையாரின் ப்ரார்த்தனைக்கிணங்கி இப்பொழுது substitute ஸம்பாதகராகவிருக்கத் திருவுள்ளம்பற்றி யிருக்கிறார். மேல் கூறியுள்ள விஷயங்களிலிருந்து இப்பொழுதும் பூர்ண ஸௌகர்யத்துடன் பத்திரிகை ஆரம்பிக்கப்படுவதாக யாரும் கருதுவதற்கில்லை. இருந்தாலும் இதை இனி நிரந்தரமாகவும் ஸௌகர்யமாகவும் நடத்திவர உதவிசெய்ய வேண்டுவது ஸம்ப்ரதாய அபிமானிகளான ஸ்ரீ வைஷ்ணவ ஸமூஹத்தினருடைய முக்ய பொறுப்பாகும். பத்ரிகை நிர்விக்னமாக நடந்துவரப் போதுமான முதலும், அதற்கென்று நியமிக்கப்படும் ஒரு (Full time) ஸம்பாதகரும் இன்றியமையாதனவாகும். ஆனாலும் இந்த ஸந்தர்ப்பத்தில் இரண்டு விதமாக அபிமானிகள் உதவக்கூடும். ஒன்று தீபிகைக்கான தங்கள் சந்தாவைப் பூராவாக உடனுக்குடன் கொடுத்துதவுவதாகும். சந்தாத் தொகை எல்லா சந்தாதாரர்களிடமிருந்து க்லுப்தமாக வஸூலாவதென்றிருக்குமாயின் ஒருவிதமான பயமுமில்லாமல் எப்பொழுதும்போல் "தீபிகை" ஸ்ரீ பகவத் ராமானுஜ ஸித்தாந்த ப்ரவசனமாகிய பெரிய கைங்கர்யத்தைச் செவ்வனே செய்து வரக்கூடும். இந்த அம்சத்தை சந்தாதாரர்கள் எல்லோரும் திருவுள்ளத்தில் இறுத்தி மற்ற அவசியமான க்ருஹக்ருத்ய செலவுகளில் இதுவுமொன்றாக எண்ணிவிடும் பக்ஷத்தில் பிறகு ஒரு கவலைக்கு மிடமிராது.

இரண்டாவதாக, ஆரம்ப தசை மிகவும் ச்ரமத்தோடு கூடியதாக விருப்பதை முன்னிட்டு சந்தாத் தொகையுடன் அவரவர்கள் சக்திக்கனுகுணமாக அதிகப்படியான நன்கொடையையும் (donation) கொடுத்துதவுமாறும் ஸவிநயம் ப்ரார்த்தித்துக் கொள்ளுகிறோம்.

தற்காலத்தில் ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹ மாத்திரமேயல்லாது பொதுவாக ஹிந்து ஸமூஹமே பலவித க்லேசங்களுக்குட்பட் டிருக்கிறது. இதுவரையில் பெரியோர்களால் போற்றப்பட்டு மனுஷ்ய வர்க்கத்திற்கே பரம ஹிதத்தை யுண்டுபண்ணக் கூடியதென விச்வஸிக்கப்பட்டு வந்த தர்மங்கள் ஆதரிப்பவரின் மாலின்யத்தால் க்ரமேண மறையும் நிலைக்கு வந்துகொண்டிருக்கின்றன. பாரமார்த்திக வழியில் பொதுவாக ஜனங்களுக்கு ச்ரத்தை குறைந்து மதம், ராஜீயம், அர்த்த லாபம் முதலிய எல்லாத் துறைகளிலும் குழப்பம் அதிகரித்துக்கொண்டே வருகிறது. இதுவரையில் போல் மதமென்பதைத் தனித்து பிரித்துப் பரப்பி வருவதற்கில்லாமல் மற்ற லௌகிக விஷயங்களால் மதக் கொள்கை மதானுஷ்டானம் எல்லாம் வெகுதூரம் பாதிக்கப்படுவதாக

விருக்கின்றன. ஆமுஷ்மிகத்தை யுத்தேசித்து மாத்திரமல்லாமல் ஐஹிக க்ஷேம லாபங்களை உத்தேசித்தும் ஸன்மார்க்கமென்பதில் தெளிவடைந்து அதைப் பின்பற்றும்படியான ஆற்றலை ஸமூஹத்திற்குண்டுபண்ண வேண்டியிருக்கிறது. இக்காரியத்தில் இந்தப் பத்திரிகை இன்றியமையாத ஸாதனமென்பதை தற்கால லோகவ்யவஹார ரீதிகளை அறிந்துள்ள யாரும் உணரக்கூடும். 20 வருஷங்களுக்கு ஜீவித்து வந்துள்ள இந்த தீபிகையே இவ்வழியில் தகுந்தபடி விசேஷமாக உபயோகப்படுமென்பது நிர்வாஹகர்களின் துணிவு. சந்தாதாரர்கள் தாங்கள் ஆதரிப்பதுடன் மற்றும் தங்கள் அன்பர்களும் ஆதரிக்கும்படிச் செய்வதாலேயே தீபிகை நிலைத்து இப்பெரிய கைங்கர்யத்தை நடத்திவருவது ஸாத்யமாகக்கூடும். இதைவிட அதிகம் இந்த ஸமயம் சொல்ல வேண்டுவதில்லை. ஸர்வேச்வரனுடைய கடாக்ஷம் பரிபூர்ணமாக ஏற்பட்டு இக்கைங்கர்யம் நிர்விக்னமாக நிறைவேறுமென்று நாம் த்ருடமாக விச்வஸிக்கின்றோம்.

ஆர். ராமஸ்வாமி அய்யங்கார்.
சே. லக்ஷ்மிநரஸிம்மன்.
காரியதரிசிகள்,
ஸ்ரீ வை. ஸி. ஸபை.

அஹிர்புத்ன்ய ஸம்ஹிதை

விஶ்வ ஸ்ருஷ்ட்வா ஸ்வாஹேர்ஜ ஸ்யாந்நிஷ்ட்ய ஸாஜ்ஜம் ।
விஶாலபாலிஹி ஸ்வாத்யம் தஸ்யாஜ ஸம்ஹஜே ।

[மஹாமஹோபாத்யாய ஸ்ரீ உப. தட்டை ஸ்ரீநிவாஸாசாரியர்]

ஸாங்க்யம் யோகம் பாசுபதம் முதலிய தந்திரங்களைப்போல பாஞ்சராத்ராகமமும் தந்திரமென்று வ்யவஹரிக்கப்படுவதால் இதற்கும் ப்ராமாண்ய பாகத்தில் ந்யூநதை இருக்கலாமோ வென்கிற ஸந்தேகமானது ஆபாத த்ருஷ்டியினால் விஷயங்களை க்ரஹிப்பவர்களுக்கு ஸம்பவிக்கக் கூடும்; ஆனால் விமர்சகர்களுக்கு அவ்விதமான ஸந்தே

கம் உண்டாகாது. பாஞ்சராத்ராகமமானது பகவச் சாஸ்திர மென்று ப்ரஸித்தி யுள்ளது. இந்த சாஸ்திரத்தை இயற்றினவர் ஸாக்ஷாத் ஸ்ரீமந் நாராயணன். இந்த விஷயத்தில்

पञ्चरात्रस्य कृत्स्नस्य वक्ता नारायणः स्वयम् ।
[illegible] वक्ता पञ्चरात्रस्य यः स्वयम् ॥

—என்கிற வசனங்கள் ப்ரமாணங்களாக ஆதரிக்கத் தக்கவை. ஸத்வமயனுன பரம புருஷன் இந்த பாஞ்சராத்ர சாஸ்திரத்தை லோகோஜ்ஜீவனார்த்தமாக அனுக்ரஹித்திருப்பதால் இந்த தந்திரத்தில் மற்ற தந்திரங்களில்போல ப்ரமம், ப்ரமாதம், ஸம்சயம், அக்ஞானம், முதலிய புருஷ தோஷங்களால் ஸம்பவிக்கக் கூடிய சொற் குற்றங்கள் பொருள் குற்றங்கள் முதலியவை யாதொன்றுமில்லை என்பது திண்ணம். அதனுல் இது அபௌருஷேயமான வேதம்போல் ஆதரிக்கத் தக்க கௌரவத்தைப் பெற்று ப்ரமாண க்ரந்தங்களுக்குள் தலைமை வாய்ந்து ஜ்வலிக்கிறது. ஸாங்கியத்தில் இருபத்தைந்து தத்வங்கள் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள் ஜடதத்வங்கள் இருபத்தி நான்கு. சேதந தத்வமொன்று. பரதத்வத்தை அவர்கள் மறந்தார்கள். பரதத்வத்தை நிரூபியாம லொழிந்ததாலும் சேதநா சேதந தத்வங்களை ப்ரம்மாத்மகங்களாகக் கூருததாலும் அது வேத விருத்த பாஹ்யதந்திரமென்று அபிஞர்களால் அநாதரிக்கப்பட்டது. இந்த தந்திரத்தை ப்ரவ்ருத்திப்பித்தவர் கபிலர். யோக தந்திரமானது ஹிரண்ய கர்ப்பனுல் இயற்றப்பட்டது. இதில் யமம், நியமம், ஆஸனம், ப்ராணு யாமம், ப்ரத்யாஹாரம், தாரணை, தியானம், ஸமாதி, என்கிற எட்டு அங்கங்களுடன் கூடின யோகமானது விரித்து உரைக்கப்பட் டிருக்கிறது. ப்ரம்மத்தை ஜகத்துக்கு நிமித்த காரணமாக மாத்திரம் இவர் ஒப்புக்கொள்ளுகிருர். அஷ்டாங்கயோகத்தை பகவதுபாஸன ப்ரகாரமாக ஹிரண்ய கர்ப்பர் கூறவில்லை. இக்காரணங்களால் வேதவிருத்தமான தந்திரமென்று கற்றறிந்தவர்கள் இதை அநாதரிக்கின்றனர். பாசுபதமோ வேத பாஹ்யங்களான விஷயங்களை ப்ரதிபாதிப்பதாலும் தத்வங்களின் மாராட்டத்தாலும் முமுக்ஷுக்களால் ஆதரிக்கத் தக்கதாக ஏற்படவில்லை. இந்த பாசுபத தந்திரத்தை அனுஸரிப்பவர்கள் நால்வர்கள். அவர்களாவன: காபாலாள், காலாமுகாள், பாசுபதாள், சைவாள். இவர்களனைவரும் வேத விருத்தமான தத்துவ ப்ரக்ரியையும் ஐஹிகா முஷ்மிக ச்ரேயஸ்ஸுக்களுக்கும் மோக்ஷத்துக்கும் அபூர்வங்களான ஸாதனாந்தரங்களையும் கல்பிக்கின்றார்கள். ஜகத்துக்கு நிமித்தோபாதான காரண

மாக இருக்கிற ப்ரம்மத்திற்கு உபா தானத்வத்தை விலக்கி நிமித்த காரணத்வத்தை மாத்திரம் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

ஜகத் காரணவஸ்து பசுபதி என்றும் கூறுகின்றனர். இவர்களுடைய ஆகாரம், உபாஸனை, தத்வ ப்ரக்ரியை, இவை அனைத்தும் வேத விருத்தங்கள். புத்தன் ஜினன் முதலிய புறச்சமயத்தார்களுடைய தந்திரங்களைப்போல இவைகள் முற்றிலும் பஹிஷ்கரிக்கத் தக்கதல்ல. வேத விருத்தாம்சம் மாத்திரம் இந்த தந்திரங்களில் அங்கீகரிக்கத் தகாதது. ஸாங்க்யத்தில் கூறப்பட்டுள்ள தத்வங்கள் ப்ராமாணிகர்களால் ஏற்றுக்கொள்ளத் தக்கவைகளே. இவை ப்ரம்மாத்மகங்களல்லவென்கிற அவர்களின் கொள்கை மாத்திரம் அநாதரிக்கத்தக்கது. மேலும் பரதத்வத்தை அவர்கள் சொல்லாமலொழிந்தது ஸாஹஸமாகும். யோக சாஸ்திரத்திலும் அங்கியான ஸமாதியை அங்க கோஷ்டியில் சேர்த்து யம நியமாதிகளான எட்டு அங்கங்களுடன் கூடியதாகக் கூறப்பட்டிருக்கிற யோகமானது நிராகரிக்கத் தக்கதன்று. ப்ரம்மோபாஸந ப்ரகாரமாக அது ஏற்றுக்கொள்ளத்தக்கதே. பாசுபதத்திலும் பசுபதி ஸ்வரூபம் மாத்திரம் நிராகரிக்கத் தக்கது. வேத ப்ரதி பாத்யவஸ்து ஸ்ரீமந் நாராயணனாதலால் அந்த அந்த தந்திரங்களில் கூறப்பட்டிருக்கிற ப்ரதான புருஷனை பசுபதி முதலிய எல்லா வஸ்துக்களும் ஸ்ரீமந் நாராயணனை ஆத்மாவாகக் கொண்டிருப்பதனாலேயே அவைகளுக்கு வஸ்துத்வம் ஸித்திக்கிறது.

இதைக் கருத்தில் கொண்டே,

[illegible] ।

[illegible] ।

—என்று கூறப்பட்டது. இந்த பாஞ்சராத்திர சாஸ்திரமானது அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை, பௌஷ்கர ஸம்ஹிதை, ஸாத்வத ஸம்ஹிதை, பரம ஸம்ஹிதை, ககேச்வர ஸம்ஹிதை, விஷ்வக்ஸேன ஸம்ஹிதை, பாரமேச்வர ஸம்ஹிதை என பல ஸம்ஹிதைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இவற்றுள் அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையானது அஹிர்புத்ன்ய தேவனால் நாரதருக்கு உபதேசிக்கப்பட்டது. அஹிர்புத்ன்ய தேவன் பதினொரு ருத்ரர்களுக்குள் ஒருவர். அஹிர்புத்ன்ய தேவன் நாரதருக்கு உபதேசித்த வண்ணம் துர்வாஸமஹரிஷியானவர் பரத்வாஜருக்கு உபதேசித்ததாக சாஸ்திர மவதரித்திருக்கிறது. இதில் அருபது அத்தியாயங்களடங்கி இருக்கின்றன. இந்த மகா கிரந்தத்தில் ஷாட்குண்ய பூஷிதமான ப்ரம்மத்தின் சாதுராத்ம்ய நிரூ

பணம், ஜகத்தின் ஸ்ருஸ்டி ஸ்திதி ஸம்ஹார ரீதி, ஜகதாதாரவர்ண னம், பரவ்யூஹ விபவார்ச்சாவதாரங்களின் ப்ரகாரங்கள், பகவதா ராதனம் ப்ரவிருத்தி நிவ்ருத்தி தர்மங்களின் லக்ஷணம், ஐஹிகாமுஷ் மிக ச்ரேயஸ்ஸுகளுக்கு உரிய ஸாதனங்கள், முக்திமார்க்க பரிபாடி, பகவத் ஸங்கல்ப ரூபமான ஸுதர்சனத்தின் மகிமை, சுத்தாசுத்த ஸ்ருஷ்டிகள், மந்திரக்ரஹண தீக்ஷா நியமங்கள், வாஸுதேவாதி யந்திரஸ்வரூபம் யந்திர தேவதா தியானக் கிரமம், மகாஸுதர்சன யந் திர லக்ஷணம், அஸ்திரங்களின் ஜன்ம நாமநிரூபணக்ரமம், யோகாங் கங்களான யம நியமாஸந ஸ்வரூப விவரணம், ப்ரம்மாஸ்திரம் முத லிய திவ்யாஸ்திரங்களின் மாகாத்மியம், அவைகளின் ப்ரயோகோப ஸம்ஹார க்ரமம், ந்யாஸ வித்யை, என்று வழங்கப்படுகிற ப்ரபத்தி யின் ப்ரபாவம், மகா சாந்தி விதானம், விஷ்ணு நாராயண வாஸு தேவ மந்திரங்களின் மகிமை, நாரஸிம்மானுஷ்டுப் மந்திரார்த்த நிரூ பணம், மற்றும் முக்கியங்களான பற்பல விஷயங்களும் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன—மற்றவைகளைக் காட்டிலும் சிலாகிக்கத் தக்கதான ஸுதர்சனமென்கிற சக்ர ராஜனுடைய திவ்ய சக்திகள், இதில் விரித் துரைக்கப்பட்டிருக்கிறது. பகவத் ஸங்கல்ப ரூபியான சக்ர ராஜ னுடைய தியானம் ஸ்தோத்ரம் ப்ரயோகம் உப ஸம்ஹாரம் முதலிய வைகள் மந்திரவித்துக்களின் மனதை மகிழச் செய்கின்றன. மேலும் ஸுதர்சன ஸஹஸ்ர நாமமும் ஸுதர்சனார்ச்சனையும் வெகு சிலாக் கியமாகக் கூறப்பட்டிருக்கிறது.

இவைகளிவ்வாறு இருக்க அதர்வாங்கிரஸ்ஸுக்களால் ப்ரத்யக்ஷீ கரிக்கப்பட்டிருக்கிற அதர்வண வேதமானது தற்காலத்தில் அத்திய யனத்யாபன கிரமத்தினின்று நழுவிப் போய்விட்டது. அதற்குக் கார ணம் அதிகாரிகளின் தௌர்லப்பியமே. அந்த அதர்வணவேத ப்ரதி பாத்யங்களான மந்திரங்கள் வெகுவாய் அஸ்திர மந்திரங்கள். அனேக மாக அபிசார க்ரியைகளிலுபயோகிக்கப்படுகிற மகா மந்திரங்களே. அவைகளுக்கு அதிகாரிகள் சத்துரு ஸம்ஹாரத்தில் நோக்குள்ள க்ஷத்திரியர்களே. அந்த ஜாதியோ இந்தக் காலத்தில் ம்ருக்யமாகப் போய்விட்டது. “நந்தாந்தம் க்ஷத்ரியகுலம்” என்று சொல்லப்பட் டிருக்கிற புராண வசனத்தின்படி நவநந்தர்களோடு சுத்த க்ஷத்ரிய குலம் மடிந்துவிட்டது. அதற்குப் பின்வந்த சந்திரகுப்தன் பிம்பி ஸாரன் அசோகன் முதலிய ராஜாக்கள் நந்த வம்ச்யர்களாக இருந்த போதிலும் முறை என்கிற சூத்ர ஸ்திரீயின் கர்ப்பத்தில் தோன்றின மௌர்யனுடைய வம்ச்யர்களாதலால் மௌர்யர்களென்கிற ப்ரஸித்தி யுள்ள ஸங்கர ஜாதியர்களாக ஆனார்கள். சுத்த க்ஷத்ரிய ஸ்த்ரீகளிடத்

தில் சுத்த க்ஷத்ரியர்களுக்கு உண்டாகிற சுத்த க்ஷத்ரிய வம்சமானது அக்காலம் தொட்டு நஷ்டமாய் போனபடியால் அதர்வண வேத மந்திரங்களை அத்தியயனம் செய்கிற க்ஷத்திரியாதிகாரிகளில்லாமல் போயிற்று. அதனால் அந்த அதர்வணவேதமானது பெயரினால் மாத்திரம் எல்லோராலும் கேட்கப்படுகிறதே ஒழிய, மந்திர க்ராமங்களால் தன் ஸ்வரூபத்தை ப்ரகாசப்படுத்திக்கொண்டு மத்த வேதங்களைப்போல் உலகத்தில் பிரகாசிக்கவில்லை. அஸ்திர மந்திரங்கள் ஸர்வோத்தமங்களென்றும் பல ஸித்தியை அபேக்ஷிப்பவர்களுக்கு அந்த அஸ்திரங்களே தக்க ஸாதனங்களென்றும் ஐஹிகங்ளான சத்துரு ஜயம், கீர்த்தி, ஸம்பத்து, பராக்கிரமம், முதலியவைகளுக்கும் ஆமுஷ்மிகங்களான ஸ்வர்க்கானுபவம் முதலியவைகளுக்கும் இன்றியமையாத ஸாதனங்களென்றும் பெரியோர்கள் கூறுகின்றனர். ஸ்ரீ மஹாபாரதத்தில் மஹான்களென்று பிரஸித்தி பெற்றிருந்த பீஷ்ம துரோணாதிகளும் இந்த அஸ்திர க்ராமங்களை உள்ளபடி அறிந்து ப்ரயோகோபஸம்ஹாரக்ரமங்களையும் உணர்ந்து தாங்கள் அவைகளை அனுஷ்டித்தும் சூரர்களான க்ஷத்ரியர்களைக்கொண்டு அனுஷ்டிக்கச் செய்தும் உலகில் அஸத்ருசமான கீர்த்தியையும் மறுமையில் உத்தமமான பதத்தையும் பெற்றார்களென்று நாம் கேட்டிருக்கிறோம். அமானுஷமான சக்தியைப் பெறுவதற்கு விருப்பமுள்ள க்ஷத்ரியர்களனைவரும் அஸ்திரங்களையே கைப்பற்றி சத்துரு ஸம்ஹாரத்தையும் ஜயத்தையும் கீர்த்தியையும் பெருமையையும் பெற்றார்களென்று இதிஹாஸங்களில் கேட்டிருக்கிறோம். அப்படிப்பட்ட மந்திரக்ராமங்கள் திவ்யாஸ்திரங்கள் அனைத்தும் இந்த அஹிர்புத்ன்ய ஸம்ஹிதையில் ரிஷி தேவதாச்சந்தஸ்ஸுக்களோடு நன்கு நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு அஸ்திரத்தின் ஸ்வரூபம்,அவற்றின் ப்ரயோகம்,உபஸம்ஹாரம் தியானம், எல்லாம் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. 34வது அத்தியாயத்தில் ப்ரம்மாஸ்திரம், தண்டசக்ரம், கலாசக்ரம், தர்மசக்ரம், விஷ்ணு சக்ரம், சந்திர சக்ரம், வஜ்ராஸ்திரம், த்ரிசூலம், ப்ரம்மசிரஸ், ஐஷீகாஸ்திரம், மோதகீ, சிகரீ, தர்மபாசம், காலபாசம், வருணபாசம், அசனி, பைநாகம், நாராயணாஸ்திரம், பாசுபதம், ஆக்னேயம், தயிதாஸ்திரம், வாயவ்யம், ஹயசிரஸ், க்ரௌஞ்சம், சக்தி, கங்காலம், முஸலம், காபாலம், கங்கணீ, வைத்யாதரம், அஹிரக்தம், காந்தர்வம், ம்ரஸ்வாபனம், ப்ரசமனம், ஸௌர்யம், தர்ப்பணம் சோஷணம், ஸந்தாபனம், விலாபனம், மதனம், கந்தர்ப்பதயிதம், பைசாசம், தாமஸம், ஸௌமனம், ஸம்வர்த்தம், மௌஸலம், ஸத்யாஸ்திரம், மாயாதரம், கோரம், ரத்பஸ்திரம், கோராஸ்திரம், ஸௌமம், த்வாஷ்ட்ரம், ஆரு

களம், பகாஸ்திரம், சீதோஷ்ணம், மானவம், ரௌத்ரம், இந்த அஸ்திரங்களின் ஸ்வரூபங்கள் வெகு அழகாகச் சொல்லப்பட்டிருக்கின்றன ஒவ்வொரு அஸ்திரத்திற்கும் லக்ஷணம் நன்ருகக் கூறப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட அபூர்வ க்ரந்தங்களெல்லாம் ஒரு மூலையில் ஒளிந்து ஒளிமழுங்கி இருளடைந்து ஜகத்தில் பிரகாசிக்காமலே போய்விட்டதே என்கிற அனுதாபத்தாலும் இந்த கிரந்தத்திலுள்ள விஷய வைசித்ரியத்தாலும் இதின் மகிமையை என் சிற்றறிவுக்கு எட்டின மட்டில் எடுத்துக் காட்டத் துணிந்தேன், ஸ்தாலீபுலாக நியாயத்தால் இரண்டு அஸ்திர லக்ஷணங்களை இங்கு எடுத்துக் காட்டுகிறேன். அபிஜ்ஞர்கள் இவைகளை கருணை கூர்ந்து கடாக்ஷிக்க ப்ரார்த்திக்கிறேன். ப்ரம்மாஸ்திர லக்ஷணமாவது :—

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

விஷ்ணு சக்ர ஸ்வரூபமாவது :—

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

என்று இப்படிப்பட்ட துர்லபங்களான அஸ்திர மந்திரங்களும் இவைகளின் ஆனுபூர்வியும் இவைகளின் புரஸ்சரண க்ரமமும் ஸித்தியும் ரஸிகர்களான எவர்கள் மனதைத்தான் கவரா ? வெகு நாளாக ஆகம சாஸ்திரங்களைப் படன பாடனங்களில் கொண்டு வரவேண்டியது அவசியமென்று சிலர் சொல்வதை கண்மூடித்தனமாக அது அவசியம் தானென்று அடியேனும் சொல்லிவந்தது உண்மையே. ஆனல் இந்த சாஸ்திரங்களின் ஸாரங்களை அறிந்து அவ்விதம் சொன்னதில்லை.

இந்த கிரந்த ரத்னத்தைப் பார்க்கும் பொழுது என்ன ஆஹ்லாதம் உண்டாகிறது. என்ன ஆச்சர்யம் என்று எம்மனதே என்னை மெய் மறக்கும்படி செய்கிறது. ஆதலால் பாஞ்சராத்ராகம சாஸ்திரங்களை ஆஸ்திகர்களான வைதிகர்கள் ஸாதுக்களான தனிகர்களின் பொருளுதவியினுல் ஆங்காங்கு ஏற்படுத்தப் பட்டிருக்கும் வித்யாசாலைகளில் பாட க்ரந்தங்களாக ஏற்படுத்தி தக்க வித்யார்த்திகளுக்கு இந்த ஆகமசாஸ்திரத்தைச் சார்ந்த ஸம்ஹிதா க்ரந்தங்களை படிப்பித்து ப்ரசாரம் செய்தால் உலகத்துக்கு மஹோபகாரம் செய்ததாக ஆகும். அஸ்திர மந்திரம் மாத்திரமல்ல. எவ்வளவோ மந்திரங்கள் ரஹஸ்யங்களுடன் கூறப்பட்டிருக்கின்றன. இந்த கிரந்த ரத்ன படனத்தினுல் பகவத் ஸ்வரூபமும் பகவதாராதன க்ரமமும் திவ்யாயுத ஸ்வரூபங்களும் அவைகளின் சக்தியும் ஸுதர்சன சக்ரமகிமையும் ப்ரவ்யூஹ விபவார்ச்ச ஹார்த்தாவதார க்ரமங்களும் அவைகளின் மாஹாத்ம்யமும், ப்ரபத்தி ஸ்வரூபமும், முக்திக்ரமமும் ஜகத் ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரக்ரமங்களும் யோக ரஹஸ்யங்களும் ஸாத்விக தேவதாகங்களான திவ்ய மந்திரங்களும் பகவத் ப்ரஸாத ஸம்பாதன ஸாதகங்களும் பகவத் க்ருபாப்ரபாவமும் அவாங் மனஸ கோசரங்களான மகாபுருஷர்களின் புண்ய சரித்திரங்களும் புண்ய ஸ்தானங்களின் மகிமையும் நன்கு அறியப்படுகின்றன. கிரந்தத்தின் கடைசி அத்தியாயத்தில் கூறப்பட்டிருக்கிற ஸுதர்சன ஸஹஸ்ர நாமங்கள் அத்யத்புதங்களாக இருக்கின்றன.

இந்த அத்தியாயத்தின் தொடக்கத்தில் நாரதர் சொல்வதாக.

பஹிரந்தஸ்தமஶ்சேதி ஜ்யோதிர்வந்தே ஸுதர்ஶநம் ।
யேநாவ்யாஹதஸங்கல்பம் வஸ்து லக்ஷ்மீதரம் விது: ॥

என்கிற ச்லோகம் உபன்யஸிக்கப் பட்டிருக்கிறது.

ஸுதர்சன ஸஹஸ்ர நாமத்தின் தியான சுலோகங்களை மாத்திரம் எழுதிவிட்டு இந்த வியாஸத்தை உபஸம்ஹாரம் செய்கிறேன்.

கல்பாந்தார்க்கப்ரகாஶம் த்ரிபுவநமகிலம் தேஜஸா பூரயந்தம்
ரக்தாக்ஷம் பிங்ககேஶம் ரிபுகுலபயதம் பீமதம்ஷ்ட்ராட்டஹாஸம் ।
ஶங்கம் சக்ரம் கதாப்ஜம் ப்ருதுதரமுஸலம் சாபபாஶாங்குஶாதீந்
பிப்ராணம் தோர்பிராத்யம் மநஸி முரரிபும் பாவயே சக்ரராஜம் ॥
ஶங்கம் சக்ரம் ச சாபம் பரஶுமஸிமிஷும் ஶூலபாஶாங்குஶாதீந்
பிப்ராணம் வஜ்ரகேடௌ ஹலமுஸலகதாகுந்தமத்யுக்ரதம்ஷ்ட்ரம் ।

ஜ்ஞாநகோஶம் த்ரிணேத்ரம் ஜ்ஞாநநிதிம் ஹாரகேயூரஹஸ்தம்-
த்யாயேத் ஷடக்ஷரணஸம்யுதஸகலஸுரவந்த்யப்ராணஸம்ஹாரத-
க்ஷம் இதி ॥

யயா நிர்விக்நஸித்த்யை ப்ராணாம் தேஶிகாந் க்ருஹாஸ்வம் ।
வாயவ்யாம் ஶ்ரீவாஸுதேவம் தேவிஶ்ருத்தாம் பத்யாம் ॥
காஶீந்த்ரடஸம்ராஜ: க்ருஷ்ணாவத்ய: க்ருஷ்ண: ।
காஞ்சீதாயத்வமோஹயாம் கவீந்த்ரம் தயாஶ்ரித: ॥

ஆலயப் பிரவேச மசோதா

[மாஜி ஜஸ்டிஸ் ஸர். ஸி. வி. குமாரஸாமி சாஸ்திரியார்.]

ஜாதி ஹிந்துக்களெனப்படும் நான்கு வர்ணங்களி லடங்கியவர்கள் தொழும் தேவாலயங்களில், தொன்று தொட்டுள்ள வழக்கத்தின் படியும் மதக் கொள்கையை யனுசரித்தும், பிரவேசம் பெருமலிருக்கும் தீண்டாதாரெனப்படுவோரை யனுமதிக்கச் சட்டஞ் செய்வது உசிதமா என்னும் விஷயத்தைப்பற்றி மட்டும் எனது அபிப்பிராயத்தை எழுதுகிறேன்.

ஜாதி முறை எப்பொழுது ஆரம்பித்ததென்று தெரியாது. அது மிகப் புராதனமானது. எல்லாவற்றிலும் முற்காலத்திய தெனப்படும் ஒவ்வொரு ஸ்மிருதியும் பாஹ்யர் அல்லது சண்டாள ரெனப்படுவோரைக் காட்டி அவர்களோடு சமூஹப் புழக்கம் கூடாதென்றும் பேசியிருக்கிறது. இந்நிலைமை இப்போது காணப்படும் தேவாலயங்கள் நிர்மாணமானதற்கும் முன்பே யுளது. ஸ்மிருதிகளை ஆதாரமாகக் கொண்ட ஆகமங்கள் கோயில் பூஜை முதலிய கருமங்களின் பிரகாரங்களை விதிக்கின்றன. ஆனதுபற்றி 'ஒடுக்கப்பட்ட வகுப்பினர்' எனப் படுவோருக்கு தேவாலயங்களில் பிரவேசித்துத் தொழும் பாத்தியதை

[குறிப்பு:—திருக்குடந்தையில் பிரசுரமாகும் ஆர்ய தர்ம பத்திரிகையின் இங்கிலீஷ் அநுபந்தத்தில் மாஜி ஹைகோர்ட் ஜட்ஜ் ம-ள-ள-ஸ்ரீ ஸ்ரீமான் ஸர். ஸி. வி. குமாரஸாமி சாஸ்திரிகள் எழுதியுள்ளதின் மொழி பெயர்ப்பு.]

ஒருகாலத்தி லிருந்ததென்றுவது அது பின்னல் பரிஹரிக்கப்பட்டு விட்டதென்றுவது சொல்லக்கூடிய பிரஸக்தியே கிடையாது. ஸ்ம்ருதி புராணம் முதலியவைகள் உபதேசிக்கும் ஹிந்து மதத்தையும் ஆகமங்கள் விதிக்கும் வைதிக கருமங்களை அனுஷ்டிப்பதால் பெறக்கூடிய பலன்களையும் மனப் பூர்வமாய் நம்பினவர்களே இக்கோவில்களைக் கட்டி அவைகளுக்கு ஆஸ்திகளையும் விட்டிருக்கிறுர்கள் என்பதும் வெளிப்படையான விஷயம். அத்தகையோர்களுக்கு ஜாதி முறையும் அதன் நிமித்தமான சமூகப் பாகு பாடுகளும் பகவானுடைய ஆக்ஞைகள். சண்டாளர் அல்லது பாஹ்யர்கள் க்ருஹங்களிலோ அல்லது பொது இடங்களிலோ செய்யப்படும் வைதிக கர்மாக்களுக்கு வெளிப்பட்டவர்கள் (அதாவது அதில் சம்பந்தப்பட அருகர் அல்லாதவர்கள்). பொது அல்லது தர்ம ஸ்தாபனங்களில் சில வகுப்பாருக்கு ப்ரவேசம் கிடையாது என்பது ஒரு புதிய கக்ஷியும் அல்ல; அல்லது ஹிந்து மதத்தில் மட்டுமே உள்ளதென்பதும் கிடையாது. பஞ்சமர் முதலியோர் பல நூற்றுண்டுகளாய்த் தங்களுடையது என்ற தெய்வங்களை தங்களுடைய தனிப்பட்ட கோவில்களில் தொழுதுவருகிறுர்கள் என்பதையும் அம்மாதிரியே தங்களுக்கு அஸாதாரணமாயுள்ள சடங்குகளையே நடத்தி வருவதையும் மறந்துவிடக் கூடாது. அவர்கள் மூடர்களாயும் ஏழைகளாயும் பிறரால் கவனிக்கப்படாதவர்களாயும் இருப்பதால் அவர்களுடைய கோவில்கள் பெரியவையாயும் திருஷ்டியைக் கவரத் தக்கவையாயும் இல்லை; அப்படியே அவர்களுடைய சடங்குகளும் சாதாரணமாயும் செலவு இல்லாதவையாயும் இருக்கின்றன. இந்நிலைமையில் ஒருபுறம் அவர்களையும் மற்றொருபுறம் பெரும் தொகையினரான ஜாதி ஹிந்துக்களுடைய மனப்பான்மையையும் கவனிக்குங்கால், தற்பொழுது ஒடுக்கப்பட்டாருடைய கோவில்களையும் சடங்குகளையும் பரிஷ்கரித்து அவற்றில் விபரீதாம்சங்களை விலக்க முயல்வதே அவர்களுக்கு உபகாரகரமாய் இராதா என்பது ஆலோசிக்கத்தக்கது. அவர்களுக்குப் பாடல்களைக் கற்பிக்கலாம்; அவர்களை பஜனைசெய்யப் பழக்கலாம்; அவர்கள் தங்கள் ஆலயங்களைச் சுத்தமாக வைக்கச் செய்யலாம். இது அசாத்யமான காரியமல்ல. பெங்களூரில் ஒடுக்கப்பட்டாரின் முன்னேற்றத்தைக் கருதி நியமிக்கப்பட்ட ப்ராம்மண உத்யோகஸ்தர் இவ்வழியில் செய்திருக்கும் அதிசயமான வேலையை நான் நேரில் பார்த்திருக்கிறேன். அவர்களில் பலர் க்ரமமாய் ஸ்நானம் செய்து பஜனை செய்கிறுர்கள்; தேவாரம், ப்ரபந்தம் இவைகளையும் ஓதுகிறுர்கள். வெளித்தோற்றத்தில் ஜாதி ஹிந்துக்கள்போலவே காணப்படுகிறுர்கள். அவர்கள் நடவடிக்கைகளும் அவ்

விதமே யிருக்கின்றன. அவர்களுடைய தெய்வங்களும் ஜாதி ஹிந்துக்களுடைய தெய்வங்கள்போலவே அவ்வளவு சக்தி, ஔதார்யம், கோபம் முதலிய குணங்கள் உள்ளவைகள் அல்ல என்று யார்தான் சொல்ல முடியும்!?

இப்பொழுது ஜாதி ஹிந்துக்களுக்கும் பஞ்சமர்களுக்கும் இடையிலுள்ள அபாரமான பிளவை நோக்குங்கால், பெரும்பான்மையோரான ஜாதி ஹிந்துக்களை, சாதாரணமான பூததயை அல்லது சகோதரத்தன்மை என்பதுபோன்ற வாதங்களால் வசீகரித்துப் பஞ்சமர்களை கோயில்களுக்குள் அனுமதிக்கச் செய்ய யத்தனிப்பது சாத்யமல்ல. "உண்மையில் சகோதரர்களோ அல்லது ஒரு குடும்பத்தாரோ அல்லாதாரை பலவந்தமாக அவர்கள் அத்தகையோரெனச் சொல்லிச் சேர்க்கப் பார்த்தால் அதனால் அவர்களிடையே முன்னிருந்ததைவிட பல மடங்குகள் அதிகப்பட்ட கோபமும் துவேஷமுமே உண்டாகுமென்பது திண்ணம்" என்று நிஸ்பிட்பெயின் என்னும் ஐரோப்பிய ப்ரமுகர் சொல்லி யிருக்கிறார். வருங்காலத்திலும் நீடூழி, இதற்கு முன் நூற்றாண்டுக் கணக்குகளாய் இருந்துவரும் அவர்களுடைய தசையின் காரணமாய், அன்னார்களுடைய உலக வாழ்க்கை ஜாதி ஹிந்துக்களின் பொறுப்பாகவே ஆகவேண்டி யிருக்கிறது. அரசாங்கத்தார் செய்யக்கூடியது மிகவும் சிறிதே. எனவே சமூகத்தில் கோபத்தை உண்டாக்கி அதனால் பஞ்சமர்களுக்குத் தீங்கே விளையக்கூடிய ஒரு ப்ரச்னையைக் கிளப்பிவிடுவது உசிதமல்லவென்பது எனது அபிப்ராயம். ஆயிரக்கணக்கான பஞ்சமர்கள் மகம்மதிய மதத்திலும் கிருஸ்துவ மதத்திலும் சேர்ந்து விடுகிறார்களே எனப்படுகிறது. இதற்குக் காரணம் அவர்களுடைய வறுமையும் வாழ்க்கை நெறியுமே. ஆலயப் பிரவேசத்தினால் அவர்களுடைய பிழைப்பிற்கு ஒரு அணுக்கூட அதிகம் கிடைக்காது. ஒருக்கால் புஷ்பம் தேங்காய் அர்ச்சகர் தக்ஷிணை என்பதுபோன்ற செலவுகளினால் அவர்களுடைய வறுமையே அதிகரிக்கலாம்!

சட்டப்படி அவர்களுக்கு ஆலயப் பிரவேச உரிமை கிடையாதென்பது மெட்ராஸ் 'லா ஜர்னல்' பத்திரிகையின் சென்ற மார்ச்சு மாதத்திய சஞ்சிகையில் ம-ா-ா-ஸ்ரீ P. R. கணபதி ஐயர் அவர்களால் வெகு தெளிவாயும் சட்டத் திறமையுடனும் விளக்கப்பட்டிருக்கிறது.

மத சம்பந்தமுள்ள சில விஷயங்களில் சட்டம் உசிதமாகலாம்; ஆனால் சட்டம் புகுரக்கூடாத விஷயங்கள் பலவுள. மேல் நாடுகளி

னும் மதக் கோட்பாடுகள் சிலவற்றில் சட்டசபைகள் தலையிட்டதனுல் நன்மையைவிடப் பெரும்பாலும் தீங்கே விளைந்திருப்பதை லிகீ முதலிய ஆசிரியர்களின் புத்தகங்களில் காணலாம். அத்தேசங்களிலோ மத விஷயங்கள் இந்தியாவைப்போல் அவ்வளவு சிக்கலுள்ளவையல்ல.

இந்தப் பிரச்னையில் முக்கியமான சில விஷயங்களை மறந்துவிடக் கூடாது. நம்மையாளும் விதேச அரசாங்கத்தார் ஹிந்துக்கள், மகம்மதியர்கள் கிருஸ்துவர்கள் சீக்கியர் பௌத்தர் முதலிய பல சமூகங்கள் இடையிலேயும் மத சம்பந்தமாக நடு நிலைமை வஹிக்கக் கட்டுப் பட்டவர்கள். தம் மதத்தையே நம்பும் கிருஸ்துவ சட்டசபை அதிகாரிக்கும் நிர்வாக உத்யோகஸ்தருக்கும் மற்ற மதங்கள் பொய் என்றே தோன்றும். அப்படியேதான் மகம்மதியருக்கும். பிரிட்டிஷாரை வெளிப்படுத்தி விடவேண்டும், இதற்கு இன்றியமையாத ராஜீய ஒற்றுமைக்கு மதம் தடையாய் இருக்கிறது, என்று நினைக்கும் ராஜீய வாதிகள் மதத்தை ஒழிப்பதே கருமமாம் என்று நினைக்கிறுர்கள். அத்தகையவர் சட்டசபைகளிலும் அவற்றிற்கு வெளியிலும் உளர். தமது மதங்களில் விஸ்வாஸம் பெருகிய பெரும்பான்மையோரான ஜனங்களோ, தம்மைத் தனியே விட்டுவிட்டால் போதும் என்று விரும்புகிறுர்கள். அவர்கள் நெடுங் காலமாக ஆள்வோரின் மத நடு நிலைமையையே நம்பி யிருக்கிறுர்கள் ; ஆனதுபற்றியே அவர்கள் ஒரு கோஷ்டியாகச் சேர்ந்து கூக்குரல் இடவாவது பிறர் வெறுக்கும்படியாக நடக்கவாவது செய்து வரவில்லை. அவர்களுக்குப் பத்திரிகைகளாவது அச்சாபீஸ்களாவது கிடையாது. ஆனுல் ப்ரசாரக் குறைவினுலேயே அவர்களுக்கு மத விஷயத்தில் தீவ்ரமான அபிநிவேசமாவது நம்பிக்கையாவது இல்லை என்று சொல்ல வொண்ணுது.

மத விஷயத்தில் நடு நிலைமையைப் பிரதமக் கொள்கையாகக் கொண்ட அரசாங்கத்தால் சட்டசபைகள் நியமிக்கப்பட்டன. லௌகிக விஷயங்களை ஒழுங்குபடுத்தச் சக்தி வாய்ந்த ஸ்தாபனங்களாக அவை ஏற்படுத்தப்பட்டன. அச்சபைகளில் தேர்தல் மூலமாகவோ சர்க்கார் நியமன மூலமாகவோ பல ஜாதி மதத்தினரும் அங்கத்தினராக உளர். அவர்களுக்குள் பல்வேறு மத அபிப்பிராயங்களும் அபிநிவேசங்களும் காணப்படுகின்றன. அவர்களுடைய நோக்கங்கள் ஒன்றுபட்டவை யல்ல. தேர்தல்கள் ராஜீயக் கொள்கைகளையே பின்பற்றுகின்றன. நியமனங்களும் அதை அடியொற்றிச் செய்யப்படுகின்றன என்பதும் தெறிந்த விஷயம்.

இங்கிலாந்தில் பல வகுப்பாருக்குள் பரஸ்பர விரோத அபிப்

ராயங்களும் தீவ்ர வாதங்களும் உள்ள விஷயங்கள் பார்லிமெண்டில் புதிதாக எழுமாகில் அவற்றைக் குறித்து ஜனங்களுடைய அபிப்ராயத்தை அறிவதற்காக பார்லிமெண்டு சபையைக் கலைத்துப் புதுத் தேர்தல்களை நடத்துவது வழக்கம். நமது சட்டசபையினர் மத சம்பந்தமான ப்ரச்னைகளை அனுசரித்துத் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் அல்ல. இப்பொழுது அரசியல் சீர்திருத்தங்களும் அதை ஒட்டிய சட்டசபை அதிகாரங்களும் ஆலோசிக்கப்படுகின்றன. அதற்காக தற்போதைய சபைகளின் கெடுக்களும் நீடிக்கப்பட்டு வருகின்றன. எனவே, இத்தகைய பிரமாதமான பிரச்னையை அப்போதைக் கப்போது புத்துயிர் பெற்றுவரும் இச்சபைகளில் பறக்கடிப்பது உசிதமல்ல. புதுச் சீர்திருத்தங்கள் வந்த பிறகு ஏற்படும் சபைகளுக்கு அதை விட்டுவிட வேண்டும் என்பதே பெரும் தொகையினரான ஹிந்துக்களுக்குச் செய்யக் கூடிய வெகு சிறிய சன்மானமும் நீதியும் ஆகும்.

இதில் மற்றொரு சங்கடம் இருக்கிறது. மத நம்பிக்கைகளைப் பற்றிப் படித்தவர்களான ராஜீய வாதிகளுக்கும் சாமான்ய ஜனங்களுக்கும் அத்யந்தம் வித்யாசங்கள் உள. மோக்ஷத்துக்கு இன்றியமையாத சாதனங்கள் என்று பெரும்பாலரான ஜனங்கள் கருதும் கிரிசைகளில் நம்பிக்கையுள்ள ராஜீய வாதிகள் எத்தனை பேர்கள் உளர்? எத்தனை பேர்கள் கோவில்களுக்குப் போகிறார்கள்? ‘பூர்ண ஸ்வய ராஜ்யம்’ ‘குடியேற்ற நாட்டு அந்தஸ்து’ என்பதுபோன்ற ராஜீய முன்னேற்றமே அவர்களிற் பெரும்பாலரின் பரம புருஷார்த்தம். அதற்கு மதக் கொள்கைகள் இடையூறுகளாகக் காணப்படுமாகில் அவைகளை அத்தகையார் பரிஹரிக்கத் தக்கவை என்றே நினைப்பார்கள். ஆனதுபற்றி மத சம்பந்த விஷயங்களைச் சட்டசபைகள் கையாளத் தகுதியற்றவைகள் என்பது ப்ரகாசமாகிறது.

சட்டத்தின் மூலமாய் ஒருவனை ஒருவன் தீண்டச் செய்ய முடியாது! சமூக பகிஷ்காரம் என்பது ஸ்வயநலமும் மத நம்பிக்கையும் உள்ளளவும் இருந்தே தீரும். கிருஸ்து மதம் பிறந்து இப்பொழுது இருபது நூற்றாண்டுகள் கழிந்தும் தென்னாப்பிரிக்காவில் கிருஸ்துவரான இந்தியர்கூட வெள்ளைக் கிருஸ்துவரோடு ஒக்க ஒரே ஸ்தலத்தில் வசிக்கவும் ஒரே ட்ராம் வண்டியில் செல்லவும் ஒரே மாதிரியான வியவஹாரங்களில் கலந்துகொள்ளவும் சாத்யப்படுகிறதில்லை. ‘மத வெறி பிடித்த’ ஜாதி ஹிந்துக்களையே சாதுக்கள் எண்ணலாம்படி அவ்வளவு தீவிரமாக ஜர்மானியர் யூதர்களைப் பகிஷ்கரிக்கிறார்கள். அமெ

ரிக்காவிலிருக்கும் நீக்கிரோவர்களின் கதி இந்தியப் பஞ்சமர்களின் தசைக்குக் கீழ்ப்பட்டதல்ல.

தற்பொழுது லண்டனில் கூடி யிருக்கும் வட்டமேஜையின்முன் நிகழும் ப்ரச்னைகள் ஆலயப் பிரவேச விஷயத்தைவிட இந்தியாவின் வாழ்வுக்கு மிகவும் முக்கியமானவை. இச்சமயத்தில் ஸ்வய அரசாக்ஷி உரிமைகளை உருப்படியாகப் பெற முயல்வதைவிட்டுச் சமூக ப்ரச்னைகளிலும் மத விஷயங்களிலும் ப்ரவேசித்து ஜனங்களுக்குள் பரபரப்பையும் தீவிரமான வித்யாசங்களையும் கிளப்பிவிடுவது மிகவும் வருந்தத்தக்கது. 'ஸ்வாதந்திரியம்' என்பதை உருப்படியாகப் பெரும் வரையிலாவது இவற்றை விட்டு வைக்கலாம். காங்கிரஸ்காரர்களுடைய விபரீத முயற்சிகளினால் வைதிகர்களான தேசாபிமானிகளுக்கு மத ஸ்வாதந்திரியத்தைப்பற்றி மிகுந்த பீதி உண்டாய்விட்டது. அதனால் இவர்கள் ராஜீய வாதிகளை வெறுக்கிறார்கள். தொன்று தொட்டு உண்டாயிருக்கும் மத விஷயங்களை சட்டத்தால் மாற்றிவிட எத்தனிப்பது விவேகமாகாது.

கல்வியும் காலமும் சமூக ஏற்றத் தாழ்வுகளையும் ஸ்வய நலமான நோக்கங்களையும் நிறவியும் ஒழித்தும் வருகின்றன. பழய எண்ணங்கள் மாறிப் புதியனவும் புகுகின்றன. ஒருகாலத்தில் இழிகுலத்தோரா யிருந்தவர்கள் பின்னர் (டிப்பினாலும் செல்வத்தாலும் விசேஷ உரிமைகளைப் பெற்று வருகிறார்கள். இந்திய அபிமானி எவரும் நமது சமூகங்களும் ஜாதிகளும் எப்பொழுதும் பரஸ்பர விரோதிகள்ாய் இருக்க வேண்டுமென்றாவது சமூக அநீதிகளும் வேற்றுமைகளும் நிலைத்தே யிருக்கவேண்டுமென்றாவது, விரும்பார். ஆகிலும் ஒடுக்கப் பட்டாருக்கு ஒருவித அனுகூலமும் இல்லாமல் அவர்களுக்கும் ஜாதி ஹிந்துக்களுக்கும் விரோதத்தை மட்டும் விருத்திசெய்யும் காரியங்களைக் கண்டு வருத்தமும் பீதியும் அடையாதாரும் கிடையாது. ஒடுக்கப்பட்டாருடைய தாழ்ந்த நிலைமைக்கு மூல காரணம் மிகவும் ஆழ்ந்து கிடக்கின்றது. அதை ஒழிப்பதற்குக் கல்வி செல்வம் முதலிய துறைகளில் ஜாதி ஹிந்துக்களுடைய ஒத்துழைப்பு இன்றியமையாதது.

கதம்பம்

சில நாள்களுக்குமுன் ஆஜ்மீரில் நடைபெற்ற 'ஹிந்து மஹா ஸபை' யென்னும் தேசிய ஸபையின் மஹா ஸங்கத்தில் அக்ராஸனம் வகித்த பாய் பரமானந்தர் என்பவர் தமது பிரதம பிரஸங்கத்தில்

தேசத்தின் முன்னேற்றத்துக்கான ஸாதகங்களைக் காட்டும் ஸந்தர்ப்பத்தில் தீண்டாதார் ஆலய ப்ரவேச ப்ரவ்ருத்திகளைப்பற்றி பின்வருமாறு பேசினர் :—‘ ஹிந்து மஹா ஸபையானது எப்பொழுதும் மத விஷயங்களில் நடு நிலைமையை வஹித்து வந்திருக்கிறது. ஆனதுபற்றி அது ஒரு ஜாதியினரை நிர்பந்தப்படுத்தி அவர்களுக்குரிய தேவாலயங்களை அவற்றில் சம்பந்தமேற்படாத மற்றொரு ஜாதியாருக்குத் திறந்துவிடும்படி பிரவர்த்திக்க முடியாது ’—என்று. பரமானந்தர் தீவிரமான ஆரிய ஸமாஜி. தேசிய வாதிகளில் முன்னணியில் நிற்பவர். ஆரிய ஸமாஜக் கொள்கைகளில் தேவாலயங்களுக் கிடமில்லை. ஆயினும் இது தகும் இது தகாது என்பதைத் தீர ஆலோசித்தே இப்படி அவர் சொன்னர் என்னத்தட்டில்லை.

* * * *

இவ்விதமே காங்கிரஸ் தலைவர் பண்டித ஜவஹர்லால் நேருவும் ஸமீபத்தில் தமது அறிக்கையில் வெளியிட் டிருக்கிறர். மத விஷயங்களுக்காகத் தாம் சட்டமறுப்பு முதலிய மார்க்கங்களி லழியப்போவதில்லை என்று அவர் கூறிவிட்டார். ஆனல் காந்தி மஹாத்மா ஸமீபத்தில் வெளியிட்ட சமாசாரங்களில் தாமும் தமது நண்பர் கேலப்பனும் தகுந்த சமயத்தை எதிர்பார்த்திருப்பதாயும் அப்பொழுது குருவாயூர் கோவிலில் மட்டுமல்லாமல் மற்ற விடங்களிலும் தீண்டாதாரை பிரவேசிக்கச் செய்யப் பட்டினி முதலிய உபாயங்களைக் கையாளப் போவதாகவும் தெரிவித்திருக்கிறர். அச்சமயத்தில் மற்ற காங்கிரஸ் வாதிகள் எவ்வளவுதூரம் தங்கள் மஹாத்மாவைத் தாங்கி நிற்கப் போகிறர்கள் என்பது புலப்பட வேண்டும்.

* * * *

ஈசுவரனுக்கும் ஜீவர்களுக்கும் உள்ள ஆதார ஆதேய ஸம்பந்தத்தை யோசித்த ஒரு ஆஸ்திகர் இதைப்பற்றிய சர்ச்சை தொன்னைக்கு நெய் ஆதாரமா அல்லது நெய்க்கு தொன்னை ஆதாரமா என்னும் ப்ரச்னையைப்போல் பயனற்றது என்று முடிவில் தீர்மானித்துவிட்டார். இவர் நினைவில் ஜீவர்களுக்கும் ஈசுவரனுக்கும் பரஸ்பர ஆதார ஆதேய சங்கை உண்டாயிற்றுப்போலும். அதை இவர் வெறுக்கும் பண்டிதர்கள்தான் முடிவுசெய்ய வேண்டும். ஆனல் ஒன்று. நெய்க்கு தொன்னை ஆதாரமாயிருந்து இதில் நெய் தங்கியிருந்தாலும் சரி. அல்லது தொன்னையைக் கவிழ்த்து நெய் தொன்னையைத் தாங்குகிறதா என்று பார்த்தபோது நெய் தரையில் வீழ்ந்தாலும் சரி. ஒருபடியாலும் நெய்யை மட்டும் நாம் ஒருவரும் விடுவதில்லை. ஆனல் ஜீவ ஈசுவரர்களில் தொன்னை யார்? நெய் யார்?

நாம் யார்? என்பது தெரிய வேண்டும்! மற்றக் கேள்விகள் பின்பு
எழலாம்!

*　　*　　*　　*

தொன்று தொட்டு ஸ்ரீராமன்பேரில் **வாதந ஹதிஃ வாலிதொ த்ரா-**
ஹம் உஹாமவெஸவ ணழ | (பெண்பாலான தாடகையைக் கொன்றது,
வாலிக்கு மறைவிலிருந்து துரோஹம் செய்தது, கரவதத்தில் மூன்றடி
பின் வாங்கினது) என்ற மூன்று தோஷங்களையே சாட்டுவது வழக்
கமா யிருந்தது. இப்பொழுது சில மாதங்களாகப் புதுத் தோஷ
மொன்று கற்பிக்கப்பட்டு அதற்கு சமாதானங்களும் திரள் திரளாகச்
சமாசாரப் பத்திரிகைகளில் வெளிவந்துகொண் டிருக்கின்றன. அதா
வது தசரதன் கைகேயியை மணக்கும்போதே அவள் பிள்ளைக்குப் பட்
டாபிஷேகம் செய்வதாய் வாக்குறுதி கொடுத்திருந்ததை யறிந்திருந்
தும் பகவதவதார மென்னப்பட்ட ராமன், தனக்குப் பட்டங் கட்டத்
தகப்பன் எத்தனித்ததை ஏற்று தன்னை அதற்குத் தயார் செய்து
கொண்டாரன்றோ? இதுவோ நீதியும் சத்தியமும், பேராசை யின்மை
யும் என்று. இதற்குப் பலவித விடைகள் வெளி வந்துவிட்டன.
இன்னமும் வரலாம். அவையெல்லாம் வித்வான்களின் பொறுப்பு.
சாமான்ய புத்தியால் நோக்குங்கால் இந்த விசாரம் முயற் கொம்பு
வேட்டைக் கொப்பாகுமோ என்று தோன்றுகிறது. தசரதரின் சப
தம் முதலிலேயே ராமனுக்குத் தெரிந்திருக்கட்டுமே! தசரதரும்
இறந்து இருப்பாரோ? பின்னர் பரதன் காட்டிய மனோ பாவத்தையும்
இருவரும் முன்னமேயே அறிந்திராரோ? கூனி கிளப்பிவிடும் வரை
யில் கைகேயியும் ஏன் மகனுக்கு ராஜ்யத்தைக் கேட்கவில்லை? இதை
யெல்லாம் கவனித்தால் ராஜ்யத்தைக் கொடுத்தாலும் பரதன் ஏற்க
மாட்டான் என்னும் நிச்சயத்தால் பிரஜைகளின் வேண்டுகோளுக்
கிணங்கி தசரதர் ஸ்ரீராமனுக்கு முடிசூட்ட ஆரம்பித்தார். பிதாவின்
வாக்கிய பரிபாலனத்தை விரதமாகக் கொண்ட ராகவனும் அதற்கு
மறுமொழி கூறுமல் ஒப்புக்கொண்டார்; பிற்பாடு கைகேயின் நிர்பந்
தத்தில் அகப்பட்டுக்கொண்ட பொழுதும் தகப்பன் பேச்சை நிறை
வேற்றவே வனவாசத்தையும் ஏற்ருர். **நஸவெஃ.... உஷியாவாவிதாஃ**
வாதாஃ (எல்லாப் பிள்ளைகளும் என்போல் தகப்பன் மார்க
ளுக்கு ஆக மாட்டார்கள்) என்று ராகவன் பிற்பாடு பேசினதற்கு
அர்த்தம் வேண்டாமா? மனுஷ்ய பாவனையையே இந்த அவதாரத்
தில் முழுவதும் நடித்தாரன்றோ? ஆகவே எந்த உத்தம குணத்துக்கு
இதனுல் ஹானி யென்று புலப்படவில்லை. தீபிகை நண்பர்களும் கவ
னிக்கலாம்.

கவிச்ரேஷ்டர்கள் நாடகத்தின் விசேஷ பிரயோஜனத்தைப்பற்றிப் பலவாறு வர்ணித்திருக்கிறார்கள். சுரோத்திரிய குலத்திலுதித்த பவபூதி மாலதிமாதவம் என்னும் நாடகத்தில்,

𑌯𑌦𑍍𑌵𑍇𑌦𑌾𑌧𑍍𑌯𑌯𑌨𑌂 𑌤𑌥𑍋𑌪𑌨𑌿𑌷𑌦𑌾𑌂 𑌸𑌾𑌙𑍍𑌖𑍍𑌯𑌸𑍍𑌯 𑌯𑍋𑌗𑌸𑍍𑌯 𑌚 ।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌤𑌤𑍍𑌕𑌥𑌨𑍇𑌨 𑌕𑌿𑌂 𑌨𑌹𑌿 𑌤𑌤𑌃 𑌕𑌶𑍍𑌚𑌿𑌦𑍍𑌗𑍁𑌣𑍋 𑌨𑌾𑌟𑌕𑍇 ।
𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑍌𑌢𑌿𑌤𑍍𑌵𑌮𑍁𑌦𑌾𑌰𑌤𑌾 𑌚 𑌵𑌚𑌸𑌾𑌂 𑌯𑌚𑍍𑌚𑌾𑌰𑍍𑌥𑌤𑍋 𑌗𑍌𑌰𑌵𑌂 ।
𑌤𑌚𑍍𑌚𑍇𑌦𑌸𑍍𑌤𑌿 𑌤𑌤𑌸𑍍𑌤𑌦𑍇𑌵 𑌗𑌮𑌕𑌂 𑌪𑌾𑌣𑍍𑌡𑌿𑌤𑍍𑌯𑌵𑍈𑌦𑌗𑍍𑌧𑍍𑌯𑌯𑍋𑌃 ।

(வேத உப நிஷத்துக்களின் அத்யயனமென்ன, ஸாங்கியம் யோகம் முதலிய சாஸ்திரங்களில் ஞானமென்ன, அவற்றைச் சொல்லியென்ன பயன். அவற்றால் நாடகத்துக் கோர் குணத்தைக் காட்ட முடியாது. ஆனால் வார்த்தைகளில் காம்பீர்யமும் ஸரஸமான அழகும் ஆழ்ந்த அர்த்தமும் பொருந்தி யிருந்தால் அதுதான் வெறும் பாண்டித்யத்தையும் கவி என்பதையும் பகுத்துக் காட்டும் அடையாளமாகும்)—என்று கூறினார்.

இது நாடகாரம்பத்தில் சூத்திரதாரன் நிகழப்போகும் நாடகத்தின் நாடகத்தைப் புகழும் பேச்சு. இதனால் பவபூதியின் நினைவில் நாடகஞ் செய்வது கவித் திறமையைக் காட்ட ஒரு நல்ல ஸாதனம் என்றதாயிற்று.

கவிச் சக்ரவர்த்தி என்று பெயர்பெற்ற காளிதாஸனோவென்றால்

𑌤𑍍𑌰𑍈𑌗𑍁𑌣𑍍𑌯𑍋𑌦𑍍𑌭𑌵𑌮𑌤𑍍𑌰 𑌲𑍋𑌕𑌚𑌰𑌿𑌤𑌂 𑌨𑌾𑌨𑌾𑌰𑌸𑌂 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 ।
𑌨𑌾𑌟𑍍𑌯𑌂 𑌭𑌿𑌨𑍍𑌨𑌰𑍁𑌚𑍇𑌰𑍍𑌜𑌨𑌸𑍍𑌯 𑌬𑌹𑍁𑌧𑌾𑌪𑍍𑌯𑍇𑌕𑌂 𑌸𑌮𑌾𑌰𑌾𑌧𑌨𑌮𑍍 ॥

(ஸத்வம் ரஜஸ்தமஸ் என்னும் முக்குணங்களினின்றும் நிலவிவரும் இவ்வுலக இயற்கையிலும் நடவடிக்கைகளிலும் பலவித ரஸங்கள், சந்தோஷம், துக்கம் முதலியன—காணப்படுகின்றன வல்லவா? இப்படி பகுப்பிரகாரகமாகப் பலவேறு ருசிகளையுடைய எல்லா ஜனங்களுக்கும் ஏக காலத்தில் திருப்தியாய் அவரவர்கள் இஷ்டப்படி அனுபவிக்கக்கூடிய சமாராதனையைச் செய்யக் கூடியது நாடகம் ஒன்றே)—என்று நாடகத்தின் பிரயோஜனத்தைக் காட்டினார். இதனால் நாடகம் செய்வதில் பஹுஜன உபகாரம் உண்டு என்று விளக்கினார். இது வித்யையின் முக்கிய உபயோகம். ஜனங்களுக்கு சித்த ஸந்தோஷத்தைப் பல படிகளில் ஏக காலத்தில் உண்டாக்குவது. அது அற்பஸாரங்களானவற்றைப் பற்றியுமிருக்கலாம்; அல்லது பேரின்பத்தையும் புகட்டலாம். ஆனால் கவி இதை விசதமாக்கவில்லை. பொதுவில்மஹாபாரதத்தில் சொன்னபடி,

'ஸந்தோஷம் ஜநயேத் ப்ராஜ்ஞ: ததேவேச்வரபூஜநம் ।'

(புத்திமானானவன் பிறர்க்குச் சந்தோஷத்தையே உண்டாக்கக் கடவன்; அதுதான் ஈசுவர பூஜை) இதுவும் பகவத் கைங்கர்யமாகக்குறையில்லை. க்ஞானம் ஸம்பாதித்தவர்களின் கடமையும் இதுவே. தன் அறிவைக்கொண்டு எந்தவிதத்திலாவது பிறர்க்குதவ வேண்டுவதென்பதே. அதை நேரில் காணும்படி செய்து களிக்கச்செய்வது மிகவும் உயர்ந்த முறை. அதுதான் நாடகத்தாலாவது, இவ்வர்த்தத்தை ஸ்ரீநிகமாந்த மஹா தேசிகன் தான் அருளிச்செய்த ஸங்கல்ப ஸூர்யோதய நாடகத்தில் இவ்வாறு அருளிச் செய்கிறார் :—

ந தச்சாஸ்த்ரம் ந ஸா வித்யா ந தச்சில்பம் ந தா: கலா: ।
நாஸௌ யோகோ ந தஜ்ஜ்ஞாநம் நாடகே யந்ந த்ருச்யதே ॥

(நாடகமாக நேரில் காணப்படாவிடில், எதுவா யிருந்தாலும் அது சாஸ்திரமுமல்ல வித்யையுமல்ல சில்பமுமல்ல கலையுமல்ல யோகமுமல்ல ஸாங்கியமுமல்ல)—என்று,

எந்த ஞானத்தையும் நேரில் நடிப்பித்துக்காட்டி புத்தியில் புகிரச் செய்ய வேண்டியது அவசியமென்றதாயிற்று. அதிலும் ஆஸ்திகர்கள் அவசியம் அறியவேண்டிய ஆத்ம யாத்திரையின் கதிகளை நாடகமே நன்றாய்ப் போதிப்பிக்குமென்றார். இதுதான் மனிதனுடைய இயற்கையான குணங்களையும் உலக யாத்திரையில் அவனனுபவிக்கும் சுக துக்காதிகளையும் அவன் அடைய வேண்டிய பரம புருஷார்த்தத்தையும் அதன் ஸாதனங்களையும் அவற்றுக்கெதிரான பிரதி பந்தங்களையும் மற்றும் இதற்காக அறியப்பட வேண்டிய ஜீவ ஈசுவர ஸ்வபாவங்கள் முதலிய ஸகல விஷயங்களையும் பிரத்தியக்ஷத்தில் காட்டுவதுதான் ஸங்கல்ப ஸூரியோதயத்தின் நோக்கு என்று காட்டினார்.

ஐரோப்பியர்கள், நாடகமென்பது அவர்களுடைய மதக் கதைகளை நடித்துக் காட்டுவதில்தான் ஆரம்பமாயிற்று என்று தங்களுடைய கிரந்த விமர்சங்களில் தீர்மானித்திருக்கிறார்கள் என்பதை இங்கு குறிப்பிடலாம். எதில் ஆரம்பித்தால் நாடகத்தின் முடிவான பரம பிரயோஜனம் பேரின்பத்தைக் கிட்டும் என்ற மார்க்கத்தை வாசியற எல்லாருக்கும் விளக்கிக் காட்டி உபதேசிப்பதே ஸ்ரீ தேசிகன் திருவுள்ளம் என்று தெளிவாகிறது.

ஸ்ரீ குண ரத்நகோசம்

[ஸ்ரீ உ. வே. எ. வி. கோபாலாசாரியர் எம். எ. பி. எல்.]

யத்3பூ4யாஸ்தவ வைப4வம் தத3நவதி4 ஸ்தோத்ராய த்3ருஶம் ஸ்வஹா
ஸ்தோத்ரம் கேவயதி3த்யத்3ஸ்வ ஜமரஹம்: ப்ராணோ விபி4ஷாத3ய: ।
ஸர்வம் தவ தே3வி வாக்3தே3வஸோமஹரஷாம் ஹி ஜக்ஞம் வத3ம்
காவார்தா: வ்யயதாஸ்கேவயிதம் ஸ்வஸ்திப்ரஸதை3ர்தி4ராத4 ॥

ச்ருதிகள் பெருமாளுக்கு லக்ஷணம் கூறும் முறையில் பிராட்டிக்கு லக்ஷணங்களை யமைத்தார். இவள் திருவடிச் செம்பஞ்சடையாளம் அவன் மார்பிலிருப்பதைக்கொண்டு பெருமாளை லக்ஷிப்பது அதாவது இன்னாரென்று வ்யக்தியைக்காட்டுவது பிராட்டிக்கு லக்ஷணமென்றார். ஸ்தாவர ஜங்கம ஸ்ருஷ்டிகளின் தாரதம்யங்களுக்கு இவளுடைய புருவத்தின் அசைத்தல்கள் காரணமென்றார். அப்படியானால் ப்ரபஞ்சம் பெருமாளுடைய விபூதி, அதன் தாரதம்யத்தை நியமிப்பது இவளுடைய ப்ரூபங்கங்களென்று மட்டும் ஏற்படும். ப்ரபஞ்சம் இவளுக்கும் சொந்தமான விபூதியல்லவோ என்று சங்கைபடும். அந்தச் சங்கையை 'ப்ரபஞ்சத்திலுள்ளதெல்லாம் உன்னுடைய வைபவம்' என்று சொல்லிப் பரிஹரிக்கிறார். ஆளவந்தார் பிராட்டி ஸ்தோத்திரமாக அமைத்த நான்கு ச்லோகங்களில், இரண்டு ச்லோகங்களில் அம்மா, பகவதி, நாம் எப்படி உம்மைத் துதிசெய்வோம். நிரவதியான உன்னுடைய மஹிமையை, உன் தயையை அறிந்து நான் நிர்பயனாய்த் துதி செய்வேன் என்று ஸ்தோத்ரா சக்தியைக்காட்டினார். பாதி ஸ்தோத்ரம் ஸ்தோத்ரா சக்தியைக் காட்டுவதிலேயே கழிந்தது. உம்முடைய பிதாவும் ஸ்ரீ ஸ்தவத்தில் ஸ்துதியை இருவகையாகப் பிரித்தாலும் இரண்டும் ஸ்ரீ விஷயத்திலியலாது என்றார். அந்த வழியில் ஏதாவது அவையடக்கம் வேண்டாமோ என்று கேழ்க்க ஸ்தோத்ரா சக்தியையும் விவரிக்கிறார். **யத்3பூ4யாஸ்தவ வைப4வம்** உன்னுடைய வைரவமெவ்வளவுளதோ அவ்வளவையும் அன்றிக்கே தனிவாக்கியமாகவும் கொள்ளவேணும்' ப்ரபஞ்சத்திலுள்ளதெல்லாம் உனது விபூதி. 'உன்னாலும், விஷ்ணுவினாலேயும், ஏ தாயே, சராசரமான ஜகத்து வ்யாப்தமானது' என்றார் ரிஷி. 'எப்படி விஷ்ணு ஸர்வகதரோ, அப்படியே இவளும், ஓ பிராமணோத்தமரே' என்று புராணரத்நவசனம். 'இந்த ஜகத்து முழுவதும் இவளுக்கும் எனக்கும் சேஷமல்லவா' என்றார் பெருமாள். முத

வில் உன்னைச்சொல்லி பிறகு தன்னை பாத்யஸ்தராக நிர்தேசித்தார். சப்தத்தால் இரண்டு பேருக்கு அவிபக்தமான ஸ்வம் என்று ஸமுச் சயத்தைக் காட்டுவதுடன், அந்தப் பொது பாத்தியத்திலும் உனக் குப்ராதான்யத்தையும் விளக்கினர். என்பது அப்யுச்சயத்தையும் காட்டும். தத்ர பித வொ தாயதி ரெஹஸா உன்னுடைய வைபவம் முழுவதற்கு முசிதமானபடி துதிக்க ஆசையே வெகுதூரம். தத்ரெ என்று ப்ரம்மம் தூரத்திலுளதென்றது பேதம். உன்னுடைய ஸ்தோத்ராசை தூரமென்கிருர். இருக்கும் குணங்களை நன்ருய் அபி வர்ணனம் செய்வது தோத்திரமாகுமென்று ஸ்ரீ ஸ்வத்தில் நிஷ்கர் ஷித்தார் எமது தகப்பனர். ஸம்யக்த்வம் வேண்டாம். ஏறத்தாழ உசிதமாய்த் துதிசெய்யவும் ஆசை இயலாது. இச்சிப்பான், ப்ரயத் நம் செய்வானென்பது க்ரமம், இங்கே இச்சையே அசக்யமாய் தூரமாயிருக்கிறது. இப்படிக்கிருந்தும் உன் விஷயத்தில் வாக்கு களைக் கவனம் செய்ய ப்ரயத்நம் செய்கிருேமே யென்று கடைசி பாதத்தில் விஸ்மயத்தைக் காட்டுகிருர். ஆசைக்கே எட்டாதென்று சதுர்முகாதிகள் கைவாங்கும் விஷயத்தில் நாம் ஸ்தோத்திரப் ப்ரயத் தினம் செய்கிருேமே. ஸ்தோதும் கெ வயம் உதீர்ஜ ஹா: 'இந்த வைபவத்தைத் துதிக்க நாம் யார்' என்று இந்த வார்த்தையைமட்டும் கொண்டார்கள். இந்த வார்த்தைக்குமேல் போகாமல் நின்ருர்கள். 'வேதஸ்' என்னும் ப்ரம்ஹாவின் நாக்கும் இவளைத் துதிசெய்ய எழும்பாது என்கிற வசனத்தை நினைக்கவேணும். இந்த்ரனுடைய ஸ்தோத்திரத்திலும் ப்ரஹ்மாதிகள் உன்னைத்துதிக்க வல்லரல்ல ரென்றுரைக்கப்பட்டது. ப்ராம்ஹபுராணத்தில் ப்ரம்ஹாவும் இதைக் காட்டியிருக்கிருர். ப்ராசீன ஆசார்ய: ப்ராசீனர்களான ப்ரம்ஹா முதலியவர்களும். ப்ரம்ஹா உன்னுடைய ஸாக்ஷாத் புத்திரன் உனக்கு குருவும், நாயகனுமான பகவானுடைய சிஷ்யர். அவரிடம் நேரில் உபதேசம் பெற்றவர் முதலியவர்களென்பதால், இந்திரனையும், ஆளவந்தார் முதலிய ப்ராசீன ஆசார்யர்களையும் வாங்கிக்கொள்ள லாம். 'நாம் எப்படி உன்னைத் துதிப்போம்' என்று சதுச்லோகியின் முதல்ச்லோகத்தின் முடிவில் கவெ ஷவம் இப்படிக்கிருந்தும் தெவி உன் னுடைய மஹிமை இன்னதென்றும் இவ்வளவென்றும் பரிசோதிக்க வொண்ணுமலிருந்தாலும் கண்களைப் பறிக்கும்படி ஜ்வலித்துக் கொண்டேயிருக்கிறது. இப்படி ஜ்வலிக்கும் தேஜோராசியை எப் படி வாய்திறந்து கொண்டாடாதிருப்பது? தேவி என்பது விளையாட் டில் ருசியுள்ள ஸ்வபாவத்தையும் சொல்லும். உன்னுடைய பரி ஹாஸ ரஸத்துக்குப் போஷகமாய் உனக்கு க்ரீடாரஸத்தை யளிக்

குமேயொழிய உனக்கு என்னுடைய ஸ்தோத்திர ஸாஹஸத்தால் சீற்றமுண்டாகாதென்றும் ஸூசனம். நான் உபஹாஸ்யதையை யடைவேனே யொழிய, உன் கோபத்துக்கிடமாக மாட்டேன். இங்கே ஸூசிக்கப்பட்ட இந்தக் கருத்தை அடுத்த ச்லோகத்தில் விவரிக்கிறார். **தவ வாஙநஸயொஹூமிஷாந ஹிஜூ° வஷு°** வாக்குக்கும் மனதிற்கும் பேச நிலமல்லாத உன்னுடைய ஸ்வரூபம், ஸ்தானம் முதலியதை வாக்கினாலும் பேசவொண்ணாது, மனதினாலும் பேசவொண்ணாது. வாயைத் திறவாமல் மனதினால் ஈச்வரஸ்வரூபத்தைப் பேசக் கூடுமோ வென்றால் கூடும். **ஸுவ அநெநெநைவவெ்ாவாஅ** என்று மௌனத்தினாலே வியாக்யானம் செய்யக்கூடியது ப்ரம்ஹ ஸ்வரூபமென்று பாஷ்கலிக்கு பாத்வர் உபதேசம் செய்த முறையென்று ப்ருஹதாரண்யகோபநிஷதத்தில் கூறப்பட்டது. பெருமாள் ஸ்வரூபத்தை அவசனத்தால் ப்ரவசனம் செய்யலாம். அதற்கும் மேற்பட்ட உன் பெருமையை அவ்வழியிலு மெட்டவொண்ணாது. பேச சத்தியில்லாத ஊமையர் தங்கள் மனோபாவங்களை முகஜாடைகளால் காட்டலாம். அப்படிக்கொத்த பேச்சில்லாத மனோபாஷையினாலு மெட்டக்கூடாதது. **காவாஅஃ வ்ய தாஉஹெகுவயிதாஃ** காவாக்குகளென்றால் நிந்திக்கத்தக்க குத்ஸிதமான சொற்கள். எங்களுடைய நிந்தநீயமான குவாக்குகளைக்கவனம் செய்ய நாங்கள் ப்ரயத்தினமும் செய்கிறோமே. ‘கஃ’ என்று ப்ரம்ஹாவுக்குப் பெயர் கவாக்குகள் ப்ரம்ஹாவின் வாக்குகள் கவாக்குகளுக் கெட்டாத விஷயத்தில் காவாக்குகளை நாம் ப்ரயோகிக்கிறோம் என்று வேடிக்கை. அவர்கள் துதி செய்ய நாம் யாரென்று அதி ஹ்ரஸ்வமாக துதியைச் சுருக்கிவிட்டார்கள். நாங்கள் தீர்க்கமாய் நீட்டுகிறோமென்றும் வேடிக்கை. இச்சைக்கே தூரமான விஷயத்தில் பிரயத்தனம் செய்கிறோமென்று வேடிக்கை. **ஹஸிவ்ருஸ்தைஷ்மிஙாம்** வாக்குகள் ப்ரசஸ்திக்கு நமஸ்காரம். அது இத்தோடு நிற்கட்டும். அந்த ஆசைக்கு ஒழிவுதான்.

ஸ்தொதாஙம் தஉாஙஷிதெவிகுவயொயொவிஹ்ரணீதெமாணாநு ।
ஸ்தொதவ்யஹ்யதஸ்ஹுதெஹாதியாாஉயெயவ விஸாஉஷ்தி ।
யஹ்ாஉஹ்உஉஷஹுணீய அணிதிஹ்காாதஸ்தொமாணாஃ
க்ஷாஙஜ்ஊஉாயஉயாஉபொஹமவதிஹ்ாம் வ்ஹ்ாவீஙநு வ்யஙாம் ॥

உம்முடைய வாக்குகள் குத்ஸித மென்கிறீர். வாக்குகளின் ப்ரசஸ்திக்கு ஆசையே ஸாத்தியமில்லை யென்கிறீர். நீர் ஸ்தோத்திரத்தை நன்றாகச் செய்ய மாட்டீரோவென்ன என்னுடைய ஸ்தோத்

திரம் குத்ஸிதமான வாக்குகளா லமைந்திருப்பினும் ஸ்தோத்திரம் என்ன கார்யத்தை ஸாதிக்கவேணுமோ, அந்தக் கார்யத்தை இந்தக் குத்ஸிதமான ஸ்தோத்திரமே முதன்மையாக ஸாதிக்கும். எனினும் பெரிய ஸ்தோத்ர உலகத்திலே கிடைக்கவே மாட்டான் என்பது திண்ணம் என்கிறார். இதென்ன சொப்படி வித்தையா, அது எப்படி கூடும் என்று கேழ்க அதை விவரிக்கிறார். என்னுடைய வாக்கு குத்ஸிதமா யிருந்தாலும், உன்னுடைய பெருமையை அது பழிப்பதாயிருந்தாலும், அந்த வாக்கு உனக்குப் பொறுக்க மாட்டாமல் அஸஹ்யமாயிருந்தாலும், நான் இந்தத் தோத்திரத்தைப் பூர்த்தியாக முடிக்கத் தான் போகிறேன் என்கிறார். ப்ருகு மஹர்ஷி பிராட்டியின் உத்ஸங்கத்தில் பெருமாள் சயனித்துக்கொண்டிருக்கையில் ரோஷத்துடன் பெருமாள் திருமார்பில் உதைத்தது பெருமாளுடைய க்ஷமா குணத்தை எப்படி உலகத்தில் விஸ்தாரப்படுத்தி பரவச் செய்ததோ, அப்படி ஆயிரம் உத்தம ஸ்தோத்திரங்கள் செய்யவல்லதாகுமோ? என்னுடைய அஸஹ்யமான குத்ஸித பாஷிதங்களை நீ காது கொடுத்துக் கேட்டு ஸ்வீகரிப்பதால் உன்னுடைய க்ஷமை, தயை, ஔதார்யம் முதலிய சிறந்த குணங்கள் ஸம்பூர்ணமாய் விஸ்தரிக்கப்படும். துதி செய்யப்படும் வஸ்துவின் உத்தம குணங்களை மிகுந்த விஸ்தாரப்படுத்துவதுதானே ஸ்தோத்திரத்தின் கார்யமென்கிறார். ஸ்தோதா வ்யாஹ்ருதகுணாநாம் யோ விஸ்தாரணீதே கவய: ஸம்ஸ்தோதாரமாஹு: துதிக்கப்படும் வஸ்துவின் குணங்களை விஸ்தாரப்படுத்துகிறவனை கவிகள் ஸ்தோதாவென்று விரும்பிப் பகருவர் ஸ்ரீ ஸ்தவத்தில் ஸ்தோத்திரத்திற்கு லக்ஷணம் கூறினார். இங்கே ஸ்தோதாவுக்கு லக்ஷணம் கூறப்படுகிறது. தத் த்வத்தே ஸ்தேயம் மய்யேவ விஶ்ராந்யதி ஸ்தோதாவின் லக்ஷணம் மேலே கண்டபடி தீர்மானிக்கப்பட்டதால், உன்னைத் துதிசெய்யும் திறமை என்னைவிட்டு அகலாமல் என்னிடமே ஸர்வோத்க்ருஷ்டமாய் பூர்ணமாய் நிலையாய்க் குடிகொண்டிருக்கிறது. என்னிலும் சிறந்த ஸ்தோதா கிடைப்பதரிது. நீர் உத்தம அத்விதீய ஸ்தோதா வென்பதற்கு நீர் சொன்ன ஸ்தோதாவின் லக்ஷணமே ஹேதுவாகுமென்கிறீர். அந்த லக்ஷணத்தை நான் ஆக்ஷேபிக்கவில்லை. அது ப்ரஸித்தமான லக்ஷணந்தான். ஆகினும் அது எப்படி இதற்கு ஹேதுவாகுமென்று ஆக்ஷேபிக்க அந்த ஹேதுவுக்கு ஸாத்ய ஸாதகத்வத்தைப் பின் பாதியால் ஸமர்த்தனம் செய்கிறார். யஸ்மாத் ஏனெ

ன்ருல் **க்ஷோதக்ஷம-க்ஷணீயகணிதி ஸ்வீகாரத:** அஸஹ்யமான பொறுக்கக் கூடாத எம்முடைய அஸப்யமும் ருந்துதமுமான துதிவார்த்தைகளை யும் ஸ்வீகரித்துக் கொள்ளுவதால் இதையும் உன்னுடைய ஸ்தோத் திரங்களி லொன்ருகச் சேர்த்துக் கொள்ளுவதால், என்னை ஸ்வஜன மாக்கிக்கொள்ளுவதுபோல என் துதியையும் உன்துதிகளிலொன்ருகத் திருவுள்ளம்பற்றி அங்கீகரிப்பதால் **க்ஷாந்த்யௌதார்ய-தயாதயஸ்த்வத்கு-ணா:** குற்றம் பொறுப்பது,பேதைக் கிரங்குவது,வேண்டியதற்கு மேல பரிமிதமாய் வழங்குவது முதலிய உன்னுடைய தயா வாத்ஸல்ய குணங்கள் இவ்விடத்தில் **பகவதி** என்று ஸம்போதனம் செய்வது அழகு. ஞான,சக்தி, பல,ஐச்வர்யாதி ஷாட் குண்யங்களிருந்தும், தயா ப்ரசுரமான க்ஷாந்தி, அநுகம்பை, உதாரம் முதலிய குணங்களல்ல வோ எமக்கு கல்யாண குணங்களாகும். எல்லாராலும் குணனம் செய் யப்படுகிறது,திரும்பவும் திரும்பவும் ஆவர்த்தனம் செய்து கொண்டா டப்படுகிறது என்று குண சப்தத்தின் நிர்வசனம். பரத்வ குணங்களை இப்படி உலகம் இடைவிடாமல் திரும்பவும் திரும்பவும் புகழாது. வாத்ஸல்ய ஸௌலப்யாதி குணங்களையே குணனம் செய்வார்கள். குணமென்கிற பெயர் இந்த குணங்களுக்குத் தான் முக்கியமாக வமை யும். நீ பகவதியாயிருந்தும், ஐச்வர்யாதி மேன்மை குணங்களிருந்தும், இந்த மார்தவ குணங்களாலே தான் உன்னுடைய யசஸ் உலகெங்கும் பரவும். இதைக்காட்ட, பகவதியென்று இங்கே கூப்பிடுகிறது. முத லடியில் தேவி என்று கூப்பிட்டார். தேவியா யிருப்பதால், மஹிஷி யாகிய உன்னை வைதாலிகர்களென்கிற ஸ்துதி பாடகர்கள் முக்கால மும் துதி செய்வர். துதியின் இலக்கணம் உனக்கு நன்ருய்த் தெரியு மென்று அங்கே ஸூசிப்பதில் தாத்பர்யம். **ஸாம்ப்ரதம் ப்ரஸ்னுவீரந்** உன்னுடைய குணங்கள் தங்களுடைய விஸ்தாரத்தைத் தாங்களே சொறிந்து கொள்ளும் குற்றமே நிறைந்த என் துதியையும் **தத்வ்ரா-ஹோவிவத்ரவெ** என்கிற நித்ய ஸூரிகளுடைய துதியைப்போல ஸ்வீகரித்துக் கொள்ளுவதால் யாதொரு ச்ரமமுமின்றி தாஞகவே உன்னுடைய க்ஷாந்தியும், இரக்கமும், ஔதார்யமும் பால் சுறப்பது போல ஸகஜமாகப் பரவி விடுகிறது. தாயாகிய உன்னுடைய வாத்ஸல்ய குணங்கள் கன்றுக்குப் பாலைச் சுறப்பதுபோல் தாமாகவே தங்களுடைய பரவுதலைச் சுரக்கின்றன. உன் தாய் குணம் உன்னு டைய குணங்களுக்கும் அமைந்திருக்கிறது. புத்திரனல்லாதவனை

யும் வா॰ தூஆரயா॥வஹாஂவஷா॰ தஂ என்று ஸ்வபுத்ரன்போல் ஸ்வீகாரத் தாலாக்கிக் கொள்ளுவதுபோல, ஸ்தோத்ரமே யாகாத என்னுடைய இந்த ஸ்தோத்திரத்தையும் நீ உனக்குத் தகுதியான ஸ்தோத்திரம் போல ஸ்வீகாரம் செய்துகொள்ளுகிறுய். என்னுடைய ஸ்தோத்திர வாக்கினல் உன்னுடைய பெருமை விஸ்தரிக்கப்படாவிட்டாலும், பொறுக்கக்கூடாத என்னுடைய அசட்டுத் துதியெனும் அஸஹ்யா பராதத்தையும் பொறுத்து, அதைப் பொறுப்பதுமன்றி இந்தப் பித் தனை நாம் காப்பாற்ற வேண்டுமென்று என்னிட மிரக்கங்கொண்டு, இவனுக்கு நாம் ஐச்வர்யத்தைக் கொடுப்போமா, அக்ஷர பதத்தைக் கொடுப்போமா, பரம பதத்தைக் கொடுப்போமாவென்றும் மேலும் மேலும் மனோரதித்துக் கொடுத்து, அத்தனையும் கொடுத்தும் இவ னுக்கு நாம் தகுந்தபடி வழங்கினேமல்லோமே என்று வெட்கப்படுவ தால், உன்னுடைய உதாரபாவம்தானே 'கொயஂ' என்று சொல்லும் படி வாக்குக் கதீதமாய் நிரதிசய தசையாய் விஸ்தார மடைகிறது. தங்களுடைய ப்ரஸித்தி விஸ்தாரத்தை உன்னுடைய விந்தகுணங் கள் தாமே செய்துகொள்ளுகின்றன. 'விகஸ ஜெ்யுவதெவுயஂ என்கிற நியாயமல்லவோ வுள்ளது குணவிஷயத்தில்? விகாஸம் விஸ் தாரம் தங்களுடைய விஸ்தாரத்தை (விகாஸத்தை)த் தாங்களே செய்தால்தான் குணம் குணமாகும் என்னுடைய துதியால் உன்குணம் உலகிற் பரவவில்லை. என்துதியைப் பொறுத்து, அதைக்கொண்டா டும் உன்னுடைய பொறுமை, உதாரம் முதலிய செய்கைகளாலேயே அந்த குணங்கள் தாமாகவே பரவுகின்றன. ஆனல் எப்படி என் ஸ்தோத்திரம், இந்த குண விஸ்தாரத்திற்கு ஹேதுவாகிறதென்றால், இது ஒரு நிமித்த மாத்ரமாகிறது. இப்படிக்கொத்த மஹாபாரத மான ஸ்தோத்திரத்தை நான் செய்ததனாலேதான் அதைப் பொறுப் பது முதலியதால் உன்னுடைய இந்த மஹா குணங்கள் பரவ இடமா யிற்று. ஆகையால் என்னுடைய துதிக்கும், துதிசெய்யும் எனக்கும் உன்னுடைய இம்மஹா குணங்களைப் பரவச் செய்வதில் காரண பரம் பரையில் அந்வயமுண்டு. ப்ருகு மஹர்ஷியின் தாடனத்திற்கு பக வானுடைய க்ஷாந்தி விஸ்தாரத்திற்கு நிமித்தத்வம்போ லாகுமிது. குணங்கள் ப்ரகாசக ஸ்தோத்ரா பேக்ஷையில்லாமல் தாமே விகஸித் துப் பரவ வேண்டுமென்கிற நியாயத்திற்கு விரோதமில்லை. நித்ய ஸூரிகள் திவ்ய வாக்குத் துதிகள் வஷிஂயதெ என்று குணங்களை ப்ரகாசப்படுத்துவதால், குணங்கள் தானுகப் பரவ வேண்டுமென்கிற குண ஸ்வபாவத்தையும், குண மர்யாதையையும் அழிக்கப் பார்க்கும் வூாஂவு யாஂ என்பதால் 'ஸ்வயம் ஏவதே விகஸஞ்தி' என்கிற நியாயத்தை ஸூசிக்கிறார்.

ஸ்ரீ:

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை

கணக்கு.

1929-ம் வருஷம் அக்டோபர் மாதம் முதல் நாளது தேதி வரையில் ஸ்ரீ வை. ஸி. ஸபையின் கணக்கு கீழே வெளியிடப்பட்டிருக்கிறது. 1930-ம் வருஷம் அக்டோபர் முதல் ஆரம்பமான 21-வது வருஷத்தில் சில ஸஞ்சிகைகள் வெளியானாலும் அவ்வருஷத்தில் வசூலான சந்தாத் தொகை மிக ஸொல்பமே. அவ்வருஷம் வி. பி. யும் அனுப்பப்படவில்லை. கணக்கில் காட்டியுள்ள சில்லரை பாக்கியுடன் அச்சாபிஸுக்கு இன்னும் கொடுக்கவேண்டியதாக வுள்ள பாக்கி ரூ. 160-1-0 கும்பகோணத்தில் ஸஹாயார்த்தம் நாடகம் ஆடிக் கொடுத்ததில் வரவு ரூ. 190-0-0.

வரவு.

	ரூ.	அ.	ப.
கை இருப்பு	148	15	4
சந்தா	1089	6	0
விளம்பரம்	88	0	0
கடன் வாங்கியது	100	0	0
புஸ்தக விற்பனை	18	2	0
பாங்கி இருப்பு	27	6	10
	1471	14	2
பாக்கி கொடுக்க வேண்டியது	25	0	4
	1496	14	6

செலவு.

	ரூ.	அ.	ப.
அச்சுக்கூலி	986	13	6
தபால் சார்ஜ் (வி. பி. யுள்பட)	205	8	0
கடன் திரும்பக் கொடுத்தது	100	0	0
பிரயாணச் செலவு, சில்லரைச் செலவு	37	3	0
பண்டிதர்களுக்கு	52	2	0
புரூப் பார்த்தவருக்கு	35	4	0
குமாஸ்தா செலவு	70	0	0
விளம்பர கமிஷன்	10	0	0
	1496	14	6

ஆர். ராமஸ்வாமி அய்யங்கார்.

எஸ். லக்ஷ்மி நரஸிம்மன்.

காரியதரிசிகள்.